# முத்தமிழ் கலசம்

ISSN 2719 - 2520
இருமாதத்திற்கொருமுறை
ஜூலை - ஆகஸ்ட் 2024
ஆண்டு 5 ▲ இதழ் 01
விலை 250/-



பன்முகத் திறமைகள் கொண்ட ஆளுமையாக

## ஷாமென் நிஸாம்டீன்

# நேசச்சரணாகதி

யூஸுஃபின் மீதான நேசத்தில்
யாகூபின் கல்பில்
கண்ணீர் வந்ததுபோல

இப்ராஹீமின் மீதான நேசத்தில்
பெருநெருப்புக்கிடங்கு
குளிர்ந்தது போல

இஸ்மாயீலின் மீதான நேசத்தில்
கூரியகத்தி கழுத்தறுக்காதது போல

மூஸாவின் மீதான நேசத்தில்
பெருநீலக்கடல் பிளந்து
கொடுத்தது போல

ஹாஜராவின் மீதான நேசத்தில்
சுடுதரைமணல்
ஸம்ஸம்மாய் ஊற்றெடுத்தது போல

தாஹா நபியின் மீதான நேசத்தில்
பேரன்புப்பூரிப்பில் வரவேற்று
மகிழ்ந்த மதீனாவாசிகளைப் போல

உன் மீதான என் அன்பின்
அடிமைத்துவக் காதல்
சரணாகதியாகட்டும் எனதிறையே!

**'மதுரசுந்தரன்'**
முஷ்தாக் அஹ்மத்
அக்குறணை


# முத்தமிழ் கலசம்

இருமாதத்திற்கொருமுறை

ஜூலை - ஆகஸ்ட்- 2024

ஆண்டு 5 ▲ இதழ் 01

**பிரதம ஆசிரியர் : சித்தி வஃபீரா**
Chief Editor & publisher : Sithy Wafeera

**சிறப்பாசிரியர் : தமிழ்நெஞ்சம் அமின்**
Hon. editor : Tamilnenjam Amine

**ஆசிரியர் குழு :**
Dr. ஜலீலா முஸம்மில்
கமர்ஜான் பீபீ
ஆர்.ஜே. பிரகலாதன்
நிலு டீன்
மின்னத் ஸரா பரூஸ்

**வடிவமைப்பு:**
Omardeen Aysha Shakeela

படைப்புக்களின் கருத்துக்களுக்கு ஆக்கதாரரே பொறுப்பு. ஆக்கங்களை சுருக்கிட, திருத்தியமைக்க ஆசிரியருக்கு உரிமையுண்டு. நூல்கள் அறிமுகம், மதிப்புரை, விமர்சனங்களுக்கு 2 நூல்கள் அனுப்புதல் அவசியம்.

படைப்புக்கள் அனுப்ப வேண்டிய முகவரி:
email :
muththamiz.kalasam@gmail.com

The Editor of "Muththamizh kalasam",
23, Amarasekara Mawatha,
Colombo 05., Sri lanka

எழுதுகோலின் கூர்முனை கொண்டு

நல்லவை விதைப்போம். அல்லவை புதைப்போம்

# ஆசிரியர் பக்கம்

அன்பார்ந்த வாசகர்களுக்கு வணக்கம்!

மலர்ந்திருக்கும் இப்புதிய மாதம் உங்கள் அனைவருக்கும் வசந்தத்தையும், வெற்றிகளையும் கை சேர்க்க வேண்டும் என்ற பிரார்த் தனையோடு, முத்தமிழ் கலசம் இந்த மாதத்தில் நான்காவது வருடத்தைப் பூர்த்தி செய்து, ஐந்தாவது வருடத்தில் அடியெடுத்து வைக்கிறது. இதுவரை எம்முடன் கரங்கோர்த்து, சேர்ந்து பயணித்த உங்கள் அனைவருக்கும் மனமுவந்த நன்றிகள்! இந் தப் பயணம் இனிதே தொடர்ந்து வெற்றி பெற உங்கள் உறுதுணை இன்றியமையாத ஒன்றாக இருக்கும் என நம்புகிறேன்.

சிற்றிதழ்களை நடத்துவதென்பதும், அதைத் தொடர்ந்து அச் சேற்றுவதென்பதும் சவாலான ஒன்றுதான். ஆயினும், வரும் சவால் களை சமாளித்து எதிர்நீச்சல் போடுவதில் தான் எதிர்கால வெற்றியே தங்கியுள்ளது. உங்கள் படைப்பாற்றலை பட்டை தீட்ட, நாமும் சிறு அணிலாக உதவுவதில் நாமும் மனநிறைவு கொள்கிறோம். ஆகவே, உங்கள் காத்திரமான படைப்புகளுடன் எப்போதும் எம்முடன் இணைந்திருங்கள்! எங்கள் பணிகளில் குறையிருப்பின் எம்மிடம் சுட்டிக்காட்டுங்கள்! திருத்திக் கொள்கிறோம். எம் பணி நிறைவாக இருப்பின், உங்கள் நண்பர்களுக்கும் முத்தமிழ் கலசத்தை அறிமுகம் செய்யுங்கள்! அனைத்திற்கும் இறைவன் போதுமானவன்.

மதத்தின் பெயராலும், இனத்தின் பெயராலும், மண்ணாசையாலும் மையம் கொண்டு, மனித உயிர்கள் மலிவாக்கப்படும் போர்கள் அனைத் தும் வலுவிழந்து போகட்டும்! உலகமெங்கும் அமைதித் தென்றல் தவழட்டும்! உதவிகள் செய்ய முடியா தொலைதூரத்தில் இருப்பினும் வாழ்வுக்காகப் போராடும் உயிர்களின் பாதுகாப்பின் நிமித்தம், பிரார்த்த னைக்காக நம் கைகள் உயரட்டும்!

நன்றி!

வ.்.பீரா வ.்.பி

(பிரதம ஆசிரியர்)

# தன்முனைக் கவிதைகள்



மீட்பருக்காக காத்திருத்தலில்
கழியும் காலங்கள்
மீட்சி வேண்டிய நிமிர்தலில்
விடியும் பொழுதுகள்

சுமக்கும் பொதிகளை
சிறிது இறக்கி வைத்தாள்
நடுக்கம் கொள்கிறது
வணிகச் சந்தை

அச்சாணி அவளென்பதை
அறவே மறந்து விட்டாள்
அதன் போக்கில்
சுழல்கிறது பூமி

சுடரிடும் ஆதித்தாயின்
சுட்டும் விழியில் கருகுகின்றன
ஆழமாய் வேரூன்றிய
பத்தாம்பசலித் தனங்கள்

அதோ... ஒளிரும்
ஞானப் பெருவெளிச்சம்
போதி மரங்களின் ஊடே
யசோதரா வருகின்றாள்

நீர்த்துப் போன
இழிவின் சாம்பல் குவியல்
உயிர்த்து சிறகசைக்கிறது
சயமரியாதைப் பறவை

முற்றிய அடிமைத்தனம்
தந்த பெரும்வலி
மூக்கணாங்கயிறை அறுத்தது
தலையாட்டிய பூம்பூம் மாடு

இறுக்கிய தளைகளை
இறுதியாய் களைகிறது
புனைந்த ஒப்பனைகளில்
மயங்கிய பெண்மை

பிறப்பின் காரணமாய்
நீளும் வாழ்க்கை
மெதுமெதுவே நகர்கிறது
தொடக்கப் புள்ளி

அடர் இருள்
நம்பிக்கையைத் தருகிறது
தூரத்து மலையில்
ஒளிரும் விளக்கு

**அன்புச்செல்வி சுப்புராஜு**
பட்டாபிராம், சென்னை



# வேண்டும் ஒரு மாற்றம்

இளஞ்சிவப்பு புடவையில் அலட்டலில்லாத அலங்காரங்களுடன் தேவதை போல் வந்து நின்றாள் அகல்யா.

விரித்த கண்களை இமைக்க மறந்து அவளையே பார்த்துக் கொண்டிருந்தான் ரகு. பெண் பார்க்க வந்திருக்கிறார்கள் என்பதற்காய் அகல்யா ஒன்றும் தலை குனிந்து நிற்கவில்லை. நிமிர்ந்து நின்று புன்னகைத் தபடி எல்லோருக்கும் வணக்கம் சொன்னாள்.

‘ரகு பொண்ண புடிச்சிருக்கா?’ என்ற ரகுவின் அப்பா ராஜேஷின் கேள்விக்கு வெட்கத்துடன் தலையசைத்தான்.

‘ரகு பொண்ண ஒழுங்கா பாத்துக்க அப்புறம் வீட்டுக்கு போய் சரியா பார்க்கல என்று சொல்லக் கூடாது’ என்று எல்லோரும் சிரிக்கட்டுமென்றே பகிடி செய்தாள் அக்கா ராதா. சம்பிரதாயத்திற்காக அனைவரும் சிரித்து வைத்தார்கள். ‘எங்களுக்கும் பொண்ண புடிச்சிருக்கு. எப்படி செய்வீங்கன்னு சொன்னா மத்த விஷயங்கள பேசலாம்’ தொடர்ந்தார் ராஜேஷ்.

‘கொஞ்சம் இருங்க அகல்யா கிட்டயும் அவ விருப்பத்த கேட்டுட்டு முடிவு பண்ணலாம்’ என்ற சிவசங்கர்

‘அம்மா அகல்யா உனக்கு மாப்பிள்ளைய பிடிச்சிருக்கா?’ தன் மகளை உற்று நோக்கியவாறு வினவினார்.

‘எனக்கு பிடிச்சிருக்குப்பா’ பளிச்சென்று பதில் சொன்னாள். ‘சந்தோஷம் எங்களுக்கும் பூரண சம்மதம். உங்களுக்கு எப்ப வசதின்னு சொன்னா முகூர்த்த தேதிய வச்சிக்கலாம்’ சிவசங்கர் உற்சாகத்துடன் பேசினார்.

‘தேதி குறிக்கிறதுக்கு முன்னாடி மத்த விடயங்கள சொன்னீங்

கன்னா நல்லா இருக்கும்.'

'மத்த விடயங்கள்னா?' சிவந்த முகத்துடன் சற்று அதட்டலாகவே கேட்டார் சிவசங்கர்.

'வரதட்சணை எப்படி போடு வீங்கன்னு சொன்னா...'

'சீ... நிறுத்துங்க இப்படி கேக்குறதுக்கு உங்களுக்கு வெக்க மில்லையா..?' 'அகல்யா இங்க வாம்மா..'

'அப்பா...'

'என் பொண்ண பாருங்க இவ ளுக்கு என்ன குறைன்னு சொல் லுங்க! கை, கால் நல்லா தான் இருக்கு. பார்க்க லட்சணமா இருக்கா. நல்லா படிச்சிருக்கா. கௌரவமான வேலைல இருக்கா. உங்க மனைவி உங்க மகன எவ் வளவு கஷ்டப்பட்டு பெத்து எடுத்தாங்களோ அதேபோல தான் இவ அம்மாவும் இவள பெத்தெடுத்தா. உங்க பையனை நீங்கள் சிர மத்தோடு வளர்த்து ஆளாக் கினீங்க, படிக்க வச்சீங்க. அதையே தான் நாங்களும் செஞ்சோம். ரகு சம்பா திக்கிறாரு இவளும் சம்பா திக்கிறா நாங்க எதுவுமே உங்க கிட்ட கேட் கலையே நீங்க மட்டும் ஏன் எதிர் பார்க்குறீங்க?'

'ரகுவோட மனைவியா வந்த பிறகு அவ வேலைக்கு போகணும்னு அவசியமில்லை' அகங்காரத்துடன் பலளித்தார் ராஜேஷின் மனைவி லதா

'சரி அப்படியே இருந்தாலும், அவர் மனைவியா இருந்தா அவ ரோட எல்லா தேவைகளையும் பூர்த்தி செய்யக் கூடியவளா இருப்பா. ஒரு சமையல்காரியா இருப்பா, ஒரு தாயா இருப்பா, ஒரு தோழியா இருப்பா, ஒரு தாதியா இருப்பா, அவருடைய குழந்தை களை வளர்க்கக்கூடிய ஒரு நல்ல தாயா இருப்பா. அவர் வீட்டை நிர்வகிக்கக்கூடிய நிர்வாகியாக இருப்பா, சமயங்களில் அவருக்கு வேலைக்காரியாக கூட இருப்பா. அப்படி பார்த்தாலும் ரகுவல்லவா கொடுக்க வேண்டும்'



ஆவேசத்துடன் குமுறியவர் சிறிது அமைதியானார். ஹாலில் அனைவரும் ஒருவித அதிர்ச்சியு டன் மௌனித்து நின்றனர். அந்த மௌனத்தை கலைக்கும் வண் ணம்,

‘இப்ப என்னதான் சொல்ல வாரீங்க?‘ கேள்வி எழுப்பினார் ராஜேஷ்.

‘என் பொண்ண ஒரு ஆண் மகனுக்கு கட்டி கொடுக்கத்தான் ஆசைப்பட்ரன் முதுகெலும்பில் லாத கோழைக்கல்ல. உங்கள அவமானப்படுத்துறதா நெனைச்சா மன்னிச்சுக் கோங்க நீங்க போக லாம்’ நிதானமாக சொல்லி முடித் தார்.

அமைதியான இரவின் தனி மையில் இடைக்கால பாடல்க ளுடன் மெய் மறந்து போயிருந் தாள் அகல்யா.

‘டொக்... டொக்... ‘அம்மா அகல்யா...’ அழைத்தவாறு அறைக் கதவருகே நின்றவரைக் கண்டவள்,

‘உள்ள வாங்கப்பா...’ என்றாள் அன்புடன். அறையினுள் வந்து அவளருகில் அமர்ந்தவர்,

‘என்னமா சோகமா இருக் கியா?’ அவளது கைகளைப் பற்றிய வாறு வினவினார். ‘எனக்கென்ன கவலப்பா நான் ஜாலியா தான் இருக்கன்.’

‘நான் அப்படி பேசினது தப் புன்னு நெனக்கிறியாடா... அப்பா மேல கோவமா?’

‘சீ... போங்கப்பா ஒங்கள நெனச்சா எனக்கு ரொம்ப பெருமையா இருக்கு. எதையும் எதிர்பார்க்காத தனக்கொரு நல்ல மனைவி மட்டுமே வேண்டு மென்று நெனக்கிற ஒரு ஜென்டில் மேனதான் நான் கல்யாணம் பண் ணிப்பேன்’

‘ஐம் சோ ப்ரௌட் ஒப் யு பா’ கைகளைப் பற்றியிருந்த தந்தை யின் கைகளில் அழுத்தமாய் முத்த மிட்டு புன்னகைத்தாள் அகல்யா.

**ஷிபானா பரீதா,**

**பதுளை**

# துளிப்பா

**அடர்ந்த**
**மூங்கில் மரத்தில்**
**அசையும்**
**குயிலின் பாடல்**

**ச. இராஜ்குமார்**



# காற்றின் மொழி

கானகத்தில் காற்றாகி
உயிரிடத்தில் மூச்சாகி.
உடலிடத்தில் குரலாகி
வேறிடத்தில் இசையாகி.
இலையுடனே கதைபேசி
அலையுடனே நுரைபேசி.
சிலையான மனிதராசி
உனை மறந்தார் உயிர்வாசி.

நீர் சுமந்த முகிலை
நீ சுமந்து வந்தென்
மண்ணில் மழையாகிறாய்
உந்தன் நிலைதான் என்ன?
வளியின் அசைவில்
ஒலியின் சத்தம்.
உலகில் ஒலிக்கும்
செவிகள் அறியும்

எந்தன் மொழியை
எவர்தான் அறிவார்.
நானோ முகாரிராகம்
முகமில்லை பாவம்.
வாடையை நாளை
வாடகை விடலாம்.
தென்றலை நாளை
தெருவில் விற்கலாம்.

வேர்களை வெட்டியே
நகரங்கள் அமைக்கலாம்.
பூமியில் வளிக்கென
போர்களும் நடக்கலாம்.
கருத்துக்கள் கூறியே
காலத்தை ஓட்டலாம்.
காரியம் நடத்திட்டால்
உலகையே காக்கலாம்.

**கோ. தனுசன்.** மட்டக்களப்பு, இலங்கை.

# கவிதைத் துளிகள்

## அம்மா

அம்மா நீ எனக்கு கடவுளை
ஆலயத்தில் காட்டினாய்
ஆனால் நான் உன்னை
கடவுளாய் உலகத்திற்கு காட்டினேன்.

## தாய்

உயிர் தந்த உறவே
என் உயிர் சுமந்தாய்
ஊண் தந்து காத்தாய்
ஊர் போற்ற வளர்த்தாய்
உன் உயிர் பிரியும் வேளை
எனை நீ மறந்தாய்.

## ஏக்கம்

அம்மா என்றழைக்கும்
ஆயிரம் குரல் கேட்டிடும்
ஆனால் மகளே என்றழைக்கும்
ஓர் குரல் கேட்கவில்லை.

## திருப்தி

உன் குறை தீர்க்க
உனக்கு ஒருவரில்லை
ஆனால் இங்கு என்குறை தீர்த்து
நீ உவகை அடைகிறாய்.

## காதல் ஓவியம்

என் உதடுகள் கவிதை வடிக்க
என் கண்கள் கண்ணீர் வடிக்க
உன் இதய வானிலே
நம் காதல் மட்டும் என்றும்
நிலைக்கும்.

**திருமதி .றீற்றா இராசலிங்கம்.**



# மௌனித்துப் போனவள்

**ஷப்ரா இல்முத்தீன்**
அட்டாளைச்சேனை

அந்த மாடி வீட்டு மேல் மாடியில் அங்குமிங்கும் நடந்து கொண்டு தன்னிலை மறந்து வாய்க்குள் எதையோ முணுமுணுத்துக் கொண்டு நின்றாள் அம்மாரா. தேகம் தொடும் தென்றலையும் மெல்லிய நிலா வெளிச்சத்தையும் ரசிக்கும் நிலையில் அவள் இல்லை. ஏன் இந்த மனிதர்கள் இப்படி. மீண்டும் மீண்டுமாய் யோசித்த போதும் அவளது சிந்தனைக்குள் எதுவுமே தட்டுப்படவில்லை.

அதேநேரம் அதுவரை தென்றலாய் வீசிக் கொண்டிருந்த காற்று வேறு அவளது கண்டுகொள்ளாமையினாலோ என்னவோ பெரும் சுழல் காற்றாக மாறியது. அத்தோடு சேர்ந்து இடியும் மின்னலும் அதனோடு இணைய அவாக் கொண்டன. இருந்தும் அம்மாரா அதையெல்லாம் கண்டு கொண்டது போல் தெரியவே இல்லை. எதையோ யோசித்து, பின் வந்த உச்ச கோபத்தை அடக்கியவளாக

நின்றவளது கரங்களை சட்டென அழுத்திப் பிடித்து அரவணைத்து உள்ளே இழுத்துச் சென்றன அவள் கணவனான முஃப்பர்ரிஜின் கரங்கள்.

‘அம்மாரா... என்ன இது.. இடியும் மின்னலும் மழையுமா இருக் குற இந்த நேரத்துல இப்படி வெளிய நிக்குறீங்க? ரசனைக்கும் ஒரு அளவு இருக்கோணும். மொதல்ல இந்த தலையை தொடைங்க..’ கோபம் கலந்த பார்வையுடன் டவலை அவளிடம் நீட்டியவருக்கும் ஏகத்துக்கு யோசனை.

நீளமாக சீவி அழகிய பின்னல் போடப்பட்டிருந்த தன் கூந்தலுக்குள் தன் அனுமதியின்றியே குடியேறிய மழைத்துளிகளை தலைமுடியைப் பிரித்து சுத்தம் செய்து கொண்டிருந்தவளுக்கு ரசனைக்கும் ஒரு அளவு இருக்கோணும் என தன் கணவன் சொல்லிய வார்த்தைகள் மீண்டும் மீண்டுமாய் செவிகளுக்குள் வந்து போயின.

உண்மை தான். எதற்கும் அளவுண்டு. அது ரசனையாக இருக்கட்டும். எதுவாகவும் இருக்கட்டும். அனைத்துக்கும் ஓர் அளவுண்டு. நினைத்தவாறே, ‘அது சரி. நீங்க எதுக்காக என்ன திருமணம் செஞ்சு கொண்டீங்க?’ என்றாள் புருவங்களை சுருக்கியவாறு.

முஃப்பர்ரிஜுக்கு புரிந்து விட்டது. ஏதோ ஒரு விடயம் அவளை காயப்படுத்தி இருக்க வேண்டும். அது அவளைக் கோபத்துக்கும் உள்ளாக்கி இருக்க வேண்டும். அதனால் தான் அதனையே நினைத்துக் கொண்டு எங்கே நிற்கின்றோம் என்று கூடத் தெரியாமல் சுழன்றடிக்கும் காற்றிலும் தூறலாய் பெய்து கொண்டிருந்த மழை அடைமழையானது கூடத் தெரியாமல் நின்று கொண்டிருந்திருக்கிறாள்.

‘அம்மாரா சும்மா எதையாச்சும் யோசிச்சிட்டு இருக்காம வாங்க சாப்பிடுவோம் எனக்கு ரொம்ப பசி.’ என்றவாறு சாப்பாட்டு அறையை நோக்கி அவர் நகர, இனி என்ன செய்ய என நினைத்தவாறே அவரைப் பின்தொடர்ந்தாள் அம்மாரா.

ஆமாம்! ஓர் அழகான குடும்பமாய் அவளும் அவளது கணவரும் அந்த வீட்டிற்கு குடி வந்து சுமார் ஒரு வருடம் கடந்து விட்டது. அழகிலும் திறமையிலும் அந்தஸ்திலும் மிக உயர்ந்த இடத்தில் இருந்த அம்மாரா பெரிதாய் யாருடனும் முகம் கொடுத்துப் பேசாத ஒருத்தியாக இருந்தாள். தேவைக்கு மாத்திரமன்றி வேறு எதற்கும் வாய் திறக்காத அவளை சிலருக்குப் பிடித்துப் போனாலும் பலருக்கு பிடிக்கவே பிடிக்காது.

‘இவள் வாய்க்குள் என்ன முட்டையா வைத்திருக்கின்றாள்?’ ‘எல்லோரும் பேசும் இடத்தில் கூட இவ்வாறு அமைதி காக்கின்றாளே இப்படி’ முகம் கொடுத்து

பேசிச் சிரித் தால்தானே அடுத்தவர் களுக்கு பேசுவதற்கும் ஒரு ஆசை வரும். இது என்ன புதிதாக உள்ளது?'

இவ்வாறு அவள் காதுபடவே பலர் கதைப்பதுண்டு. திருமண வீடுகளாக இருக்கட்டும் அல்லது வேறு ஏதேனும் குடும்ப ஒன்று கூடல்களாக இருக்கட்டும். அவ ளும் அவள் பாடும் என இருந்து விடுவாள். கணவனுடன் உரிய இடத்திற்கு வந்து வந்த வேலையை முடித்துக் கொண்டு அவர் முகம் பார்த்து, போவோமா என கேட்ட வாறு கிளம்பி விடுவாள். இதனைப் பார்த்து அவள் மீது எரிச்சலும் கோபமும் படாத ஆட்களே இல்லை எனலாம்.

'என்னவோ பெரிய இடத்து மாப்பிள்ளையை முடிச்சதால இவக்கு லெவல் கூடிட்டு. அது தான் வாயே திறக்கிறா இல்ல.'

'அப்படி இல்லடி. வாய தொறந்தா முத்து கொட்டிடும். அதனாலதான் அவ வாய மூடிட்டு இருக்கா. உனக்கென்ன?'

கொல்லென சிரிக்கும் ஒலியும் இவ்வாறான கிண்டல் பேச்சுக் களும் பலமுறை அவளது மனதை உடைத்தது உண்டு. எதற்காக இப் படி எல்லாம் பேசுகிறார்களென. இன்றும் அப்படித்தான் தனது கணவனின் சகோதரி வீட்டில் அவரது மகளுக்கு திருமணம் ஏற்பாடாகி இருந்தது. திருமண நாள் என்றால் குடும்பத்தவர்கள் அனைவரும் அங்குதான் இருப் பார்கள். திருமணத்திற்கு வந்தி ருந்த ஏனைய தூரத்து உறவி னர்கள் எல்லாம் சென்ற பின்ன ரும் முக்கியமான குடும்ப அங்கத் தவர்கள் அங்கிருந்து தங்களுக்குள் அளவளாவி சுகம் விசாரித்துக் கொண்டும் மணப்பெண்ணை நக்கல் அடித்தும் மணமக்களுக் கான உணவுகள் தயாரிப்பதும் ஏனைய விடயங்களை செய்வது மாக அவர்கள் மிகவும் சந்தோமாக இருக்கும் அந்த நேரத்தில் கூட அம்மாரா அமைதியாகத் தான் இருந்தாள். அதுவரை அவளைப் பற்றி பல முறை அவளறியாமலே ஏனையோரிடம் ஏசிப் பேசிக் கதைத்துக்கொண்டிருந்த முஃபர் ரிஜின் சகோதரியால் அன்று என் னவோ வாயைக் கட்டுப்படுத்தவே முடியாமல் போய்விட்டது.

'என்னம்மா.. இன்றைக்கு கூட உன் வாயை திறக்க மாட் டியா? உன் வாய்க்குள்ள அப்படி என்னதான் இருக்குன்னு பாக்க எங்களுக்கு ஆவலா இருக்கு. எங்கட தம்பிக்கு நீ ஒரு நல்ல மனைவியா இருப்பன்னு கட்டி வெச்சா நீ இப்படி ஊர் உலகத்தைப் பார்த்து பேசாம சிரிக்காம எதுலயுமே கலந்துக்காம ஒரு சிடுமூஞ்சியா இருக்கிறது எங்களுக்கு உண்மையாகவே விருப்ப மில்லை. உண்மையா நீ யாரைப் போல? ஒங்க உம்மாவைப் போலயா இல்ல வாப்பாவைப் போலயா?'

கேட்டு அவர் முடிக்க அங் கிருந்த அனைவரும் ஒரு வித

ஏளனப் பார்வையுடன் அவளை நோக்கிப் புன்னகைக்க, அவளால் ஏனோ தாங்கிக்கொள்ளவே முடியவில்லை. பெண் என்பவள் எல்லோர் பார்வையிலும் வளவளவென்று பேசிக்கொண்டிருக்கும் ஒருத்தியாகத்தான் இருக்க வேண்டுமா? ஏன் ஒரு பெண்ணால் அமைதியாக தன்னுடைய வேலைகளும் தானும் என இருந்து விட முடியாதா? ஒவ்வொருவருடைய இயல்பும் வெவ்வேறாக இருக்கும் என்பதை ஏன் இவர்கள் புரிந்து கொள்ள மறுக்கின்றார்கள் என்று அவளுக்கு உண்மையில் விளங்கவே இல்லை.

சரி போகட்டும் என இருந்தால் முஃபர்ரிஜின் சகோதரி மகளான கடைக்குட்டி ஆய்ஷாவும் வந்து, 'மாமி! நீங்க ஏன் யாரோடையும் பேசுறீங்க இல்ல.. எங்கட உம்மா சொன்னா உங்களுக்கு பெருமை கூடிட்டாம் அதனாலதான் அதவாய் மூலம் வெளிப்படுத்தக் கூடானு உங்களுடைய வாயை மூடி வச்சிருக்கீங்களாம்' எனச் சொல்லிவிட்டு அவள் ஓடிவிட, அதற்கு மேல் அந்த வீட்டில் இருக்கவே அவளுக்கு பிடிக்கவில்லை.

அவர்களுடன் முகம் பார்த்துக் கதைக்கவோ ஏன் அந்த இடத்தில் இருந்து கொண்டு எந்த வேலையை செய்வதற்கும் அவளுக்கு மனம் வரவில்லை. சட்டென கணவனை அழைத்துக் கொண்டு வீட்டுக்கு வந்து விட்டாள்.

உண்மையில் அவள் இப்படி அமைதியாகி மௌனித்துப் போனதற்கும் காரணம் இல்லாமல் இல்லை.

ஒரு தடவை அவள் பாடசாலையில் கற்றுக் கொண்டிருந்த போது அவள் நண்பியான ஷியாமா, 'அடி உனக்கு கணவராக வரப்போறவரு எப்படி இருக்கணும்னு எதிர்பார்க்கிற?' எனக் கேட்டதற்கு, 'பாடத்தை கவனி' என்று முறைத்த அம்மாராவை ஷியாமா விட்ட பாடில்லை.

'சொல்லடி சொல்லு.. நான் யாரிடமும் சொல்ல மாட்டேன்' என அவள் நச்சரிக்க,

'எனக்கு யாரைப் போல் இருக்க வேண்டும் என்றெல்லாம் இல்லை. ஆனால் என்னுடைய எல்லாத் தேவைகளையும் என்னுடைய தந்தையை போல் நிறைவு செய்து எனக்கு மிகுந்த பாதுகாப்பை, மன மகிழ்ச்சியைத் தரக்கூடிய ஒருவராக என் கணவன் எனக்கு அமைய வேண்டும். எப்போதுமே அவரில் நான் பாதுகாப்பை உணர வேண்டும். திறமைசாலியான ஒருவராகவும் பிறர் கண்ணியத்தை பேணக் கூடியவராகவும் அவர் இருக்க வேண்டும்' என அவள் சொல்லி முடிக்க அப்படியாயின் நீ இன்னாரைத் தானே விரும்புகிறாய் என அம்மாராவை ஏற்கனவே இரண்டு வருடமாக ஒரு தலையாகக் காதலித்துக் கொண்டிருந்த அஷ்ஃபாக்கின் பெயரை இழுத்து

அவள் ஒரு வதந்தியை கட்டிவிட அந்த வதந்தி வகுப்பறையைத் தாண்டி பாடசாலையைத் தாண்டி ஊரில் சுற்றிச் சுழன்று இறுதியில் அவளது தந்தையினது காதை எட்டியது. தான் இத்தனை நம்பிக்கையோடு வளர்த்த தன் மகள் இந்த இளமையின் துடிப்பால் ஏதேனும் பிழையான முடிவை எடுத்து விடுவாளோ எனும் பயத்தில் மகளை மிகவும் கடினமாக அவர் எச்சரித்து வைக்க அப்போது தான் அம்மாராவின் தாய் அவளுக்கு சில ஆறுதல் வார்த்தைகளைக் கூறினார்.

அதன் பின் தான் அவளுக்குப் புரிந்தது வாயை கட்டுப்படுத்தி வைத்திருப்பதன் அவசியம் என்னவென்று. அன்றிலிருந்து அவளிடம் யார் எதைக் கேட்டாலும் யோசித்து அதன் பின்னரே பதிலளிக்க தொடங்குவாள். யாரேனும் தேவையற்ற கேள்விகளை கேட்டாலோ அல்லது ஊர் உலக விடயங்களை அங்கே அளவளாவத் தொடங்கினாலோ அவளது வாய் இறுக மூடப்பட்டு விடும்.

எதற்காக எதையோ பேசி பாவத்தை தேடிக்கொண்டு அடுத்தவர்களைப் பற்றி தவறாக நினைத்து அதனால் இறைவனது கோபத்தைக் கட்டிக் கொள்ளவென அவள் தன்னைத் தானே கட்டுப்படுத்திக் கொண்டு பல போதுகளில் அமைதியாக கடந்து சென்றிருக்கிறாள். இதை அறியாத ஏனையோர் அவள் தங்களோடு சேர்ந்து பாவம் செய்வதில்லை என அவள் மீது பொறாமைப் பட்டு அவளை ஏளனமாகப் பேசத் தொடங்கி இருந்தனர்.

அப்போது தான் அவள் தோளைத் யாரோ தொடுவது கண்டு திடுக்கிட்டு திரும்பிப் பார்க்க அங்கே நின்று கொண்டிருந்திருந்தவர் முஃபர்ரிஜ் தான்.

‘அம்மாரா நீங்க எதையும் யோசிக்காதீங்க. அடுத்தவங்க உங்களப் பத்தி என்ன பேசி இருப்பாங்க என்று எனக்கு தெரியும். ஆகப்போனா நீங்க யாரோடையும் பேசுறீங்க இல்லைனு அதை ஒரு குறையா சொல்லி இருப்பாங்க. அது வழமையா எல்லாரும் சொல்றது தானே. இந்த உலகத்துல பேசினாலும் குற்றம் சொல்லுவாங்க.. அமைதியாக இருந்தாலும் சொல்லுவாங்க. எனக்குத் தெரியும் உங்களப் பத்தி. நீங்க எப்பவுமே எங்கட கடைசி காலம் வரைக்கும் இப்படி அல்லாஹ்க்கு பயந்து வாழ்ந்தால் போதும். வேறு எதுவுமே எனக்குத் தேவையில்லை. எதையும் யோசிக்காதீங்க’ என்றவாறு அவளை அரவணைத்துக் கொண்ட கணவன் முஃபர்ரிஜைப் பார்த்து கண்கலங்கிப் போனவளாய் இறைவனைப் புகழத் தொடங்கினாள் அம்மாரா.

(முற்றும்)

# புத்தகமே துணை

அகம் மலர அறம் பெருக
அன்னை காட்டிய
ஆரம்ப உலகம்
அம்மாவைக் கண்டேன்
ஆட்டைக் கண்டேன்
இலை கண்டேன்
ஈயும் கண்டேன்

அகரங்கள் தொடர
அர்த்தங்கள் புரிய
அடுகடுக்காய்ப் புதினங்கள்
அறிவினைக் கூட்ட

தரை தூரம் தாண்டாமல்
விலைவாசியில் வியர்க்காமல்
விந்தைகள் பலவும்
விழிமுன்னே விரிய

நல்லதெது கெட்டதெது
நயம்பட விளக்கவும்
நம்பிக்கை நாணயம்
நம்மிலே சேரவும்

தர்க்கங்கள் விட்டு
தகராறு போக்கவும்
தகடாக இருந்தாலும்
தங்கமாக நோக்கவும்

கண்டதே காட்சி
கொண்டதே கோலமெல்லாம்
மாய்ந்து மடியவும்
மறுமலர்ச்சி பொங்கவும்..

ஆன்மீக லௌகீக
ஆத்மார்த்த உயிர்ப்புக்கும்
ஆபத்தைத் துடைத்து
ஆயுதமாய்க் காக்கவும்..

புத்தகமே துணை- அது
புத்தாக்கக் கலை
பூமித்தாய் மடியே
பூத்திருக்கும் கொடை

**என்.நூரி**
தர்கா நகர்

# காஸாவின் குழந்தைகள்

என்ன பிழை செய்தோம் நாங்கள்
பூக்குமுன் பறிப்பதற்கு
உரிமை கொடுத்தவர் யார்
இதழ்கள் விரியாமலே
இறைவன் பாதம் சென்றடையும்
மலர்களாகிப்போகிறோம் நாங்கள்
உங்கள் அரசியலுக்காய்
எங்கள் ஆன்மாக்கள்
விலை பேசப்படுகின்றன
விழி மலர்ந்து சிரிக்க வேண்டிய
எங்கள் பொழுதுகள்
விழிபிதுங்கி மருண்டு போகின்றன
மனிதத்தைப் போற்றும்
மதங்களின் பெயரால்
மனிதம் தொலைந்து
மரணித்துப்போகிறோம்
என்ன பிழை
செய்தோம் நாங்கள்

**மூதூர் சுஸானா முனாஸ்**

# ஸ்கேபிஸ் SCABIES எனப்படும் சொறி சிரங்கு நோய் தொற்றும் நிவாரணமும்



Dr **ஜலீலா முஸம்மில்** (MBBS/SL)
ஏறாவூர் ஆதார வைத்தியசாலை
ஏறாவூர்
இலங்கை

**ஸ்கேபிஸ் ஒட்டுண்ணி சொறி சிரங்கை எப்படி ஏற்படுத்துகிறது?**

ஸ்கேபீஸ் தோலின் கீழ் குடியேற்றமாக (Colonization) வாழ்கிறது. Sarcoptes scabiei ஒட்டுண்ணி 0.4 மி.மீ பருமனுடையது. பெண் ஒட்டுண்ணி தோலின் கீழ் ஒரு பள்ளத்தைத் தோண்டி அங்கே முட்டையிடுகிறது. முட்டைகளை இட்ட மூன்று முதல் நான்கு நாட்களுக்குப் பிறகு, குடம்பி லார்வாக்கள் குஞ்சு பொரித்து, தோலின் மேற்பரப்புக்கு இடம் பெயர்ந்து அங்கு ஒரு புதிய பள்ளத்தை உருவாக்குகின்றன. இதுவே சொறிச்சலுடன் சிரங்காக மாறுகிறது. ஒரு சிறிய பொத்தான், முடிச்சு போன்று சொறி சிரங்கு காணப்படும்.

பாதிக்கப்பட்ட நபர் தோலில் 5 முதல் 10 பூச்சிகள் வரை தங்கி நோயை உண்டாக்கும். நோய் தொற்று ஏற்பட்டு இரண்டு மூன்று வாரங்களுக்கு நோய் அறிகுறிகள் தோன்றாது என்பது முக்கியமான விடயமாகும்.

ஒட்டுண்ணி மற்றும் அதன் முட்டை மற்றும் சருமத்தின் கீழ் அதன் மலம் என்பன நோயெதிர்ப்பு எதிர்வினையின் விளைவை உண்டாக்குகிறது. இதனாலேயே அரிப்பு ஏற்படுகிறது. பொதுவாக



ஒட்டுண்ணி தொற்றி மூன்று வாரங்களுக்குப் பிறகு நிகழும், ஆனால் இரண்டாவது தொற்று ஏற்படுகையில் மிக விரைவாக அரிப்பு ஏற்பட்டு விடும். ஏனெனில் முதற்தொற்றில் எதிர் வினைக்கலங்கள் காணப்படுவது இதற்கு காரணமாக அமைகிறது.

**பரவுதல்**

ஸ்கேபிஸ் மிகவும் அதிகம் தொற்றும் வாய்ப்பு உடையது.

முக்கியமாக நேரடியாகத் தோலில் இருந்து தோல் தொடர்பு மூலம் ஏற்படுகிறது.

நெருக்கமான மற்றும் நீடித்த உடல் தொடர்பு மூலம் இது விரும் பப்படுகிறது

கூட்டான குடும்ப வாழ்க்கை, குழந்தைகளின் குழுக்கள், சமூகங்கள் குழு வாக வாழுதல்,

பாலியல் ரீதியாகவும் பரவு கிறது.

நெருக்கமான குடியி ருப்புகள் (பள்ளிகள், தினப் பராமரிப்பு, மருத்துவம னைகள், ஓய்வு இல்லங்கள் அநாதை இல்லங்கள், சேரிக் குடியிருப்புகள், நர்சரிகள், சிறைச்சாலைகள், சுகாதார நிறுவனங்கள், குழந்தை பராமரிப்பு நிலையங்கள், நீண்டகாலமாக தங்கியிருக் கும் நிறுவனங்களில், குறிப்பாக வயதானவர்களுக்கு ஏற் படுகிறது.



Clinical, dermatoscopic and microscopic findings of infestation with Sarcoptes scabiei var. hominis

சில சந்தர்ப்பங்களில், ஆடை அல்லது படுக்கையில் இருந்து மறைமுகமாக பரவுவது சாத்திய மாகும், இருப்பினும் ஒட்டுண்ணி மனித தோலுக்கு வெளியே நீண்ட காலம் வாழாது.

குறிப்பாக ஏழை நாடுகளில் இது தொற்றுநோய்களின் போது 50% மக்களை பாதிக்கலாம்.

**சிக்கல்கள்**


ஸ்கேபிஸ் ஒரு ஆபத்தான நோய் அல்ல, ஆனால் தொடர்ச்சி யான மற்றும் கடுமையான அரிப்பு

வாழ்க்கை தரத்தை கடுமையாக பாதிக்கும். சில நேரங்களில் அரிப்பு காரணமாக புண்கள் ஏற்படலாம், அதிலே பற்றீரியா தொற்று கலந்து விடலாம்.

அல்லது அரிதான சந்தர்ப் பங்களில், தோல் தடித்து பட்டை / செதில்கள் தோன்றும் நிலை ஏற்படும். இது 'க்ரஸ்டி' அல்லது ஹைபர்கெரோடிக் ஸ்கேபீஸ் என்று அழைக்கப்படும்.

**அரிப்பு மற்றும் புண்கள் ஏற்படும் இடங்கள்**

- ☐ கைகள் (விரல்களுக்கு இடையில்)
- ☐ வயிறு
- ☐ மணிக்கட்டு
- ☐ அக்குள்
- ☐ பெண்களில் மார்ப கங்கள்
- ☐ குறிப்பாக ஆண்களில் பிறப்புறுப்புகள்
- ☐ தொப்புளைச் சுற்றி
- ☐ தொப்பை



சிறுவர் மற்றும் குழந்தைகளுக்கு இது தவிர முகம் உள்ளங்கைகள் மற்றும் உள்ளங்கால்களில் ஏற்படும்

**கண்டுபிடிப்பு** Diagnosis

வழக்கமாக, ஸ்கேபிஸைக் கண் டறிய மருத்துவர் பரிசோதனை செய்யத் தேவையில்லை, பார்த்த வுடன் மருத்துவ முறை அடிப் படையில் தெரிந்து விடும்.

ஆனால் சில நேரங்களில் அவர் கள் ஒரு நுண்ணோக்கியின் கீழ் தோல் மாதிரியைக் கொண்டு ஒட்டுண்ணியைப் பார்க்க முடி யும். அல்லது தோல் சோதனை (டெர்மோஸ்கோபி) செய்யலாம்.

சிரங்கு தொற்று நோயா னது அடோபிக் டெர்மடிடிஸ், லிச்சென் பிளானஸ், எக்ஸிமா உள் ளிட்ட பிற தோல் நிலைகளோடு கண்டுபிடிப்பதில் குழப்பத்தை ஏற்படுத்தும்.

**நோய் யாருக்கு அதிகம் ஏற்படும்?**

எல்லோரும் சிரங்கு நோயால் பாதிக்கப் படலாம், ஆனால் சிலர் அதிகமாகப் பாதிக் கப்படுகின் றனர்.

இது பெரும் பாலும் முதியவர் கள், சிறு குழந்தைகள் தொடர்ந்து படுக்கையில் இருப் பவர்கள், நோயெதிர்ப்பு குறை பாடுள்ள வர்கள் (கார்டி கோஸ் டீராய்டு சிகிச்சை, எச்.ஐ.வி, முதலியன) போன்றவர்களை அதி கம் பாதிக்கும்

நோயாளி ஆயிரக்கணக்கான அல்லது மில்லியன் கணக்கான ஒட்டுண்ணிகளால் பாதிக்கப்பட்டு காணப்படுவார். இந்த பலவீன மான மக்களில், கீறல் / புண்கள் உயிருக்கு ஆபத்தான பாக்டீரியா தொற்றுகளையும் (செப்சிஸ்) ஊக் குவிக்கும்.

**பரவுவதைத் தூண்டும் காரணிகள்**

- ☐ பாதிக்கப்பட்ட முதல் நபர்கள் அல்லது பாதிக்கப்பட்ட அனைத்து தொடர்புகளுக்கும் சிகிச்சை இல் லாமல் இருத்தல்
- ☐ சுகாதாரம் மற்றும் குடி நீருக்கான தட்டுப்பாடு
- ☐ ஆடை மற்றும் படுக்கை இடங் களில் ஒட்டுண்ணி அழிக்கப்ப டாமை.
- ☐ விபச்சாரம்
- ☐ சிகிச்சை
- ☐ பரிந்துரைகள் ஸ்கேபிஸ் சிகிச்சை நாட்டுக்கு ஏற்ப மாறுபடும்.
- ☐ நோயாளி மற்றும் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் நோய் இருந்தாலும் இல்லா விடினும் ஒரே நேரத்தில் சிகிச்சை பெற வேண் டும்.
- ☐ மருத்துவ ஆலோசனைப் படி சிகிச்சை பெறுவதுடன் அனைத்து ஆடைகள் படுக்கை விரிப்புகள் துடைக்கும் துண் டுகள் போன்றவற்றை நன்றாக கழுவி கடுமையான வெயிலில் உலர்த்த வேண்டும்.
- ☐ அல்லது சுடுநீரில் ஆடை அணிகளை கழுவி உலர்த்த வேண்டும். கழுவ முடியாத தடிப்பமான கனமான ஆடை கள் போர்வைகள் போன்றன சுமார் இரண்டு மூன்று வாரகாலம் பாவனையை நிறுத்தி வெயிலில் உலர்த்த வேண்டும்.

**1) Permethrin பேமெத்ரின் சிகிச்சை**

இதை கழுத்தின் கீழ்பகுதியில் இருந்து பாதிக்கப்பட்ட அனைத்து இடங்களிலும் விரல் இடுக்குகள் உடல் பூராகவும் தேய்த்து பூச வேண்டும்.

இதை தடவுவதற்கு முதல் நன்றாக குளித்து உடல் சருமத்தை சுத்தப் படுத்தி உலர வைத்தல் வேண்டும்.

சில வேளைகளில் குழந்தை களுக்கு தலை மற்றும் முகத்தில் மருந்தைப் பூச வேண்டிய நிலைமை ஏற்படலாம். அவ்வாறு நிலைமையில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும் ஏனெனில் இம் மருந்து உட்கொள்ளப்பட்டால் நஞ்சாகத் தொழிற் படக் கூடியது.

மருந்து பூசப்பட்ட உடற் பகு தியை கழுவ நேரிடின் குறிப்பிட்ட வேலை முடிந்த பிறகு மீண்டும் பூச வேண்டும்.

மருந்தை உடலில் 12 மணித் தியாலங்கள் வைத்திருக்க வேண் டும். மறுநாள் காலை அனைத்து

துணிகளையும் துவைத்து நோயா ளியும் குளிக்க வேண்டும்.

மேற்கூறிய நடைமுறையை ஏழு நாட்களுக்குப் பிறகு மீண் டும் செய்ய வேண்டும்.

சிகிச்சையின் பின்னர் ஒன்று முதல் இரண்டு வாரங்களுக்கு அரிப்பு நீடிக்கலாம்.

## 2) Sulphur சல்ஃபர் சிகிச்சை


இந்த சிகிச்சை தொடர்ந்து மூன்று நாட்களுக்கு பயன்படுத்த வேண்டும் உடலில் இந்த மருந்து 24 மணித்தியாலங்கள் இருக்கும் படி பார்த்துக் கொள்ள வேண் டும்.

மறுநாள் காலை அனைத்து துணிகளையும் துவைத்து நோயா ளியும் குளிக்க வேண்டும். மருத் துவரே நோயாளிக்கு பொருத்த மான சிகிச்சையை தீர்மானிப்பார். சிகிச்சையின் பின்னர் ஒன்று முதல் இரண்டு வாரங்களுக்கு அரிப்பு நீடிக்கலாம்.

## 3) BB (benzyl benzoate) சிகிச்சை

இந்த சிகிச்சை தொடர்ந்து மூன்று நாட்களுக்கு பயன்படுத்த வேண்டும் உடலில் இந்த மருந்து 24 மணித்தியாலங்கள் இருக்கும் படி பார்த்துக் கொள்ள வேண்டும்.

மறுநாள் காலை அனைத்து துணிகளையும் துவைத்து நோயா ளியும் குளிக்க வேண்டும்.




மேலும் குறட்டமிட்டோன் கிறீம் லிண்டேன் கிறீம், ஐவமைக் டின் மாத்திரைகள் போன்ற மருத்துவ முறைகளும் ஸ்கேபிஸ் நோய்க்கு நிவாரணங்களாகப் பயன் படுத்தப்படுகின்றன.

அரிப்பு நீங்குவதற்கு அண்டி ஹிஸ்டமின் மாத்திரைகளை எடுத் துக் கொள்ளலாம்

பக்டீரியா தொற்று ஏற்பட்ட நிலைமைகளில் அதற்குரிய ஆண்டி பயாட்டிக் பரிந்துரைகள் மேற் கொள்ளப்பட வேண்டும்.

தொற்று ஏற்பட்டவர்கள் குடும்ப உறுப்பினர்களுடன் மிக நெருக்கமான தொடர்பை குறைத்து சுகாதார நடவடிக்கை களை மேற்கொள்ளுதல் வேண் டும். சுத்தம் பேணுதல் வேண்டும்.

### ஸ்கேபிஸ் நோய் தடுப்பு

ஒட்டுண்ணி தொற்றை நெருங்கிய தொடர்பில் இருந்து தடுக்க முடியாது. (ஒரே படுக்கையில் தூங்குவது, உடலுறவு கொள்வது, உடை மாற்றுவது) பாதிக்கப்பட்டவர்களுக்கு விரைவான சிகிச்சை அளித்தால் மட்டுமே ஒட்டுண்ணியின் பரவலைக் கட்டுப் படுத்த முடியும்.

### அடிப்படை தடுப்பு நடவடிக் கைகள்

சிரங்கு நோய் தோன்றியவுடன், பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்:

பாதிக்கப்பட்ட நபருடனான தொடர்பைக் கட்டுப்படுத்துங்கள் (வருகையை கட்டுப்படுத்துங்கள், படுக்கை, ஆடைகள் அல்லது குளியலறைகளை முன் கிருமி நீக்கம் செய்யாமல் பகிர்வதைத் தவிர்க்கவும்),

சமூகங்களில், முடிந்தால் பாதிக்கப்பட்ட நபரை தனிமைப் படுத்தவும் அல்லது குழுவாக உள்ள அனைவரையும் ஒன்றிணைக்கவும்,

சிகிச்சையின் போது, கையுறைகளை அணிதல் உங்கள் கைகளை தவறாமல் கழுவவும் (முன்னும் பின்னும், அதே போல் ஒரு நாளைக்கு பல முறை), இது அங்குள்ள ஒட்டுண்ணிகளை நீக்கும்.

அதிக வெப்பநிலையில் துணிகளைக் கழுவவும்.

சிகிச்சையை விரைவாகத் தொடங்க வேண்டும், மேலும் பாதிக்கப்பட்ட நபரின் தொடர்புகளும் சிகிச்சை செய்யப்பட வேண்டும்.



சாத்தியமான மறுசுழற்சி தவிர்க்க சலவை கிருமி நீக்கம் செய்யப்பட வேண்டும்.

நன்றி!



# உயிரில் கலந்த உறவே!

பூமியில் உலவும்
பொன்னிலவுச் சிலையே!
பூஞ்சோலையில் புன்னகைத்த
பாசமல்லிப்பூவே!

கண்வழி நுழைந்த நீ
என்னெஞ்சினில் உறைந்து
நிதமும் எனை
உயிர்ப்பிக்கும் ஒட்சிசனாய் !

நித்தமும் மொத்தமாய் அத்தனை
உயிரணுக்களையும்
ஆளுகின்றாய்! அன்பே!
ஆழிக்கரையில் கோர்த்த
நம் கரங்களின் வெம்மை
இன்னும் நீங்கவில்லை!

காலங்காலமாய் உன்
கனிமொழியினில் கரைந்திட
ஆசையடி! - உனதான
கற்கண்டுச் சொற்கொண்டு
எனையாள வருவாயா !

என் உதிரத்தமணிகளில் உனது
நாமமும் கலந்தோடும்
உண்மையைப் புரிவாயா !
உன்னெஞ்சமதில்
குடிபுகுந்து மஞ்சமிட வேண்டுமடி!
உன் நினைவு கழன்றிடின்
என்னுயிரும் உதிர்ந்திடுமெனும்
உண்மையை நீயறிய
வாய்ப்பில்லை மானே !
வருந்துகிறேன்!

வண்ணமயிற் பெண்ணே!
வாழ்ந்திடலாம் நூறாண்டு!
எந்நாளும் எண்ணங்கள் சிறக்க,
ஈன்றோரும் வாழ்த்த,
வையகம் போற்ற
இணைந்திடுவோம்!

உயிரில் கலந்த என்னுறவே!
ஈன்றிடுவோம் இன்னும்
ஐயிரண்டும் ஆத்மாக்களை!

மெய்யன்போடு
மேதினியில் வாழ்ந்த
மணமக்கள் என்றுலகம்
வாழ்த்தட்டும்!

பெண்ணே!
சுவாசிக்க, உன் வாசம்
தென்றலிற் தேடுகின்றேன்! !
ஓ! அன்பே நீ!
என்னுள்ளே அல்லவா
உறைந்துள்ளாய்!

**கிண்ணியா சபீனா**



# இனியவள் தமிழ்மகள்! இனிமை ஊற்றவள்

இனியவள் தமிழ்மகள் இனிமை ஊற்றவள்
கனிநிகர் சுவைதனைக் கவிகளில் தருபவள்
பனிமலர் குளிரினில் பருவம் பார்ப்பவள் .
நனிமிகு தமிழ்மொழி நவின்றிட மகிழ்பவள் .
மலரின் மென்மையை மனத்தில் கொண்டவள்
உலவிடும் மக்களின் உணர்வினில் கலந்தவள்
பலரது மொழிதனில் பதமாய் நிற்பவள் .
நிலமகள் அவளும் நீள்புகழ் முகரமும்
ஒருங்கே அமைந்த ஒப்பிலாத் திருமகள் .
அருமைச் சீர்களில் அணிகலன் பூண்டவள்
எருவாய் வாழ்வினில் எதனிலும் விஞ்சிடும்
கருவாய் நின்று காக்கும் கடவுளாம் .
தருவாள் ஞானம் தாரணி செழித்திட
வருவாள் நம்மிடம் வணங்கியே தொழுவோம் .
விதியை வெல்லும் வித்தைக் கற்றவள்
சதிகளை விலக்கிச் சாதனை பலசெயும்
மதியைத் தன்னுள் மங்காப் பெற்றவள்
கதியாய் என்றும் கனவிலும் பற்ற
விரைந்துமே வருவாள் வித்தகி மலரவள் .
திரையின் பின்னே தீபமாய் ஒளிர்பவள் .
கரையின் ஓரம் காற்றில் தென்றலாய்த்
தரையில் வீசிடும் தளர்நடைப் பயில்பவள் .
உறவுகள் ஒன்றிட உயிர்ப்பசி போக்கிடும்
கறவையின் குணத்தைக் கற்றுத் தேர்ந்தவள் .
மறந்திடல் முடியுமா மாத்தமிழ் மொழிதனைத்
திறந்திடத் திறந்திடத் திறமைகள் வெளிப்படும்
சிறந்திடும் எழுத்துகள் சிறப்பைச் சொல்லிடும் .
உறவென உயிரென உணர்வினில் கலந்திடும்
தமிழை மூச்சாய்த் தரணி கொண்டிட
அமிழ்தம் திகட்டும் அருஞ்சுவை மொழியால் .
சிமிழாய் விளக்கும் சிந்தையைத் தூண்டிடும் .
உமிழ்நீர் சவைத்திடும் உதிரம் ஊற்றாய்
உணர்வினில் கலந்திடும் உடலில் பாய்ந்திடும்
உணவும் தாய்மொழி உயிரும் தாய்மொழி
மணந்தரும் மனிதரின் மறுமொழி அதுவெனக்



குணமாய் மாறிக் குன்றா வாழ்க்கையை
விலையிலா வகைதனில் விருட்சமாய் உலகினில்
மலையிலும் மடுவிலும் மாற்ற மின்றியே
கலைகளால் நிறைந்து கற்பகத் தருவெனச்
சிலைகளைச் செதுக்கும் சிற்பியின் கரங்களில்
உருவம் பெற்றிட உலகை ஆளுமே .
கருவறை தன்னில் காலம் வென்றிடும்
மொழியினை விலைக்கே மொழிதலும் வேண்டா .
அழிவிலாத் தமிழை அழித்திட வேண்டா.
கழிநெடி லடிகள் காப்பியம் சொல்லும் .
விழிகளில் மொழியை விடையாய்த் தேக்கிட
வினாக்கள் தேவை வீணே யன்றோ !
கனாக்கள் தமிழினில் கவிகளாய் எழுதிட
கனவுகள் நனவுகள் கணக்காய் மாறிட
சினத்தை அழிக்கும் சீர்மை என்றுமே
இதந்தரும் மொழிதனில் இருப்பது திண்ணம் .
மதத்தைத் தாண்டியும் மலர்ந்திடும் தமிழினில்
இனத்தைக் காட்டியும் இழிவும் செய்திடல்
சினத்தைத் தூண்டிடும் சிறுமை எண்ணமே .
தவிர்ப்போம் போர்தனைத் தரணியில் அமைதியும்
கவியாய் நாட்டினில் கருத்தாய் ஓடிட
புவியில் நாளும் பூத்திடும் தமிழ்மொழி !
செவியில் கேட்கும் செம்மொழி சிறக்கவே !!!

**கவிமாமணி.சரஸ்வதி பாஸ்கரன்**



# தந்தை எனும் உயிர்நாடி

உலகிலேயே இறைவன் வழங்கும் மிகப்பெரும் பொக்கிஷம் ‘ஸாலிஹான தந்தை’ தந்தையர் தினம் என்ற ஒற்றை நாளை வைத்து ஒட்டு முழுதாக கொண்டாடித் தீர்க்கும் ஒற்றை உறவு அல்ல தந்தை;

நாம் நிம்மதியாய் உறங்க வேண்டும் என்பதற்காய் ஒற்றை மனிதனாய் ஓராயிரம் இரவுகளின் தூக்கத்தை ஒய்யாரமாய் தியாகம் செய்த உன்னத உறவு தந்தை;

நாம் மூன்று வேளை ஒழுங்காய் சாப்பிட வேண்டுமென்பதற்காய் தான் பல வேளை சாப்பாட்டை மறந்து ஓயாது உழைக்கும் ஓர் உயிர் ஜீவன் தந்தை;

நம் கனவுகளும் ஆசைகளும் உயிர்ப்பிக்கப்பட வேண்டுமென்பதற்காய் தன் கனவுகளையும் ஆசைகளையும் ஓரம் தள்ளி தூரமாக்கிய ஓர் அன்பான உறவு தந்தை;

குடும்பத்தோடு சந்தோஷமாய் இருக்க வேண்டுமென்ற ஆசை

தாண்டி குடும்பம் சந்தோஷமாக இருக்க வேண்டுமென்பதற்காய் தூரங்களையும் தொலைத்தெறிந்து தொலைவுகளில் தனித்து வாழும் ஓர் தனித்துவமான உறவு தந்தை;

கொட்டித் தீர்க்க பல வலிகள் இருந்தும் உள்ளே அடக்கி தனக் குள்ளே அழுது கொண்டே; தன் புன்னகையை மட்டுமே காட்டி தன் பிள்ளைகளை அன்பாய் வளர்க்கும் ஓர் அற்புத உறவு தந்தை;

தான் பட்ட கஷ்டங்கள் தன் பிள்ளைகள் பட்டு விடக் கூடாதென்பதற்காய் வயோதிபம் கடந்தும்; வருத்தங்கள் இருந்தும்; தன்னை வருத்தி உழைக்கும் ஓர் உயிர் மூச்சு தந்தை;

தான் பெறாத வெற்றிகளை தன் பிள்ளையின் வெற்றியில் கொண்டாடித் தீர்க்க பிரார்த்த னையால் உருகும் ஓர் பொக்கி உறவு தந்தை;

மறந்தும் கூட தன் பிள்ளை முன் தான் செய்த தியாகங்களை சொல்லிக் காட்டி விடக்கூடாதென்பதற்காய் தன் மகிழ்ச்சியான முகத்தை மட்டும் காட்டி மகிழ்வுறுத்தும் ஓர் ஆழமான உறவு தந்தை;



உலகின் எந்த இடைவெளியையும், எதைக் கொண்டு நிரப்பினாலும் தந்தை என்ற இடைவெளியை எதைக் கொண்டும் நிரப்ப முடியாத ஓர் உயிர் நாடி தந்தை;

எல்லாவற்றிற்கும் மேலாக, இறைவன் உலகிலேயே சுவனத்தை வழங்க முடியுமென்றால் ‘தந்தை‘ எனும் உருவிலேயே காட்டி விடக் கொடுக்கும் இறையோனின் மா பெரும் இன்பப் பரிசு தந்தை;

இப்படியான தந்தையை தந்தையர் தினம் என்ற ஒற்றை நாளில் மட்டும் சமூக வலைத் தளங்களில் கொண்டாடித் தீர்க் கும் சுயநலம் பிடித்த பிள்ளை களாய் இருப்பதிலிருந்து வெட் கித்துக் கொள்வோம்...

தீராப் பிரார்த்தனையிலும்; நெறி பிறழா நடத்தையிலும்; மனம் நோகா வார்த்தையிலும்; பொய் சேரா வெற்றியிலும்.... உயிர் மூச்சு நம்மை விட்டு பிரியும் வரை தந்தை என்ற உயிர் நாடியை ஒவ்வொரு நாளும் இறைவன் முன் கொண்டாடித் தீர்ப்போம்...

رَّبِّ ارْحَمْهُمَا كَمَا رَبَّيَانِي صَغِيرًا

‘இன்னும், இரக்கம் கொண்டு பணிவு என்னும் இறக்கையை அவ்விருவருக்காகவும் நீர் தாழ்த் துவீராக மேலும், ‘என் இறைவனே! நான் சிறு பிள்ளையாக இருந்த போது, என்னைப் (பரிவோடு) அவ்விருவரும் வளர்த்தது போல், நீயும் அவர்களிருவருக்கும் கிருபை செய்வாயாக!’ என்று கூறிப் பிரார்த்திப்பீராக!‘

**பாத்திமா ஹகீமா அமீனுதீன்**
ஓட்டமாவடி

# பிரளயம்

**ஜெஸ்மின் றமீஸ்**
காத்தான்குடி



திரும்பத் திரும்பக் கரை தொட்டு
மீளும் அலை போல
அலைகிறாள் அவள்
அகழ்வாரைத் தாங்கும்
நிலம் போல
அனைத்தையும் தாங்கும்
ஒரு சுமைதாங்கியாய் அவள்

தன்னை நோக்கி வரும்
தூசி துகள்களையெல்லாம்
ஓரமாய் ஒதுக்கி விட்டு
தூய வளியை தூர நோக்கில்
சவாசிக்கத் தரும்
மென்காற்று அவள்

பண்டிகை நாட்களில் கூட
பழைய துணியுடன்
பசிப்பிணியாற்றும்
பணியில் அவள்

மீதமான உணவுகளைக் கொட்டும்
குப்பைத் தொட்டியாகவே
எப்போதும் அவள்
வயிறு இருக்கும்
இன்னும் சில நேரங்களில்
போதாத தன்மையுடன்
பசித்திருக்கும்

அவளுக்கென எல்லாம் இருக்கும்
எதையும் அவள்
அனுபவித்திருக்காத நிலையில்

தனக்கென வாழாத அவளின்
ஆழ்மனத்து எண்ணங்கள்
அழிக்கப்படும் பொழுதெல்லாம்
உள்ளத்தில் அழுது கொண்டு
உதட்டில் ஒரு
புன்னகையை மட்டும்
உதிர்த்து விட்டுச்
செல்வாள் அவள்

இன்னுமின்னும்
வாய் விட்டுத் தன் தேவைகள்
தீர்க்கக் கேட்கத் தயங்கும்
பேதையாகவே அவள்
சில நேரங்களில்
அவை மறுக்கப்படுமோ
என்ற அச்சத்தில்

சமையல்காரியாக
சுத்திகரிப்புத் தொழிலாளியாக
தாயாக, தாதியாக
சமயத்தில் தாயாகவும் அவள்

வலிகள் மறந்து
மரத்துப் போன அவள்
தன்னிலை உணர்ந்தபோது
ஆயுளின் முக்கால் வாசி
முடிந்து விட்டிருந்தது

எனினும் அலையாய் அலையும்
அவள் உள்ளத்தில் ஆழிப் பேரலை
அடித்துக் கொண்டுதான்
இருக்கிறது

மந்தமாருதத்தை
அவள் பார்வை வீசினாலும்
உள்ளுக்குள் சண்டமாருதம்
வீசிக்கொண்டுதான் இருக்கிறது

அகழ்வாரைத் தாங்கும்
நிலமான அவள் அடி மனதில்
வெள்ளப் பிரளயம் ஒன்று
அணை உடைத்து
பாய்ந்து கொண்டுதான் இருக்கிறது

இதை உணராத அவர்கள்
இன்னும் அவளைப்
போற்றிக் கொண்டுதான்
இருக்கிறார்கள்
இந்த இல்லத்துக்கு
அரசி நீதான் என்று - ஆனால்
அவளுக்கு மட்டுமே தெரியும்
அந்த வீட்டுச் சமையல் கட்டுக்கு
மட்டுமே அவள் அரசி என்று

ஆனாலும் அவள் அதரங்கள்
புன்னகைச் சிதறல்களை
சிந்திக் கொண்டுதானிருக்கும்

அவளுக்கென எல்லாம் இருக்கும்
எதையும் அவள்
அனுபவித்திருக்காத நிலையில்.....

# ஏழ்மை

அட்சயபாத்திரத்துக்கு எதிரான
அரிசிப் பானை
சில்லறைக்காசுகளின் சப்தம்
இடுவதாக பருப்பு பாத்திரம்

சொட்டும் நீராக கொட்டும்
எண்ணெய் உருளை
பூனைக்கிப்போது புகலிடம்
தந்துள்ள விறகு அடுப்பு


ஏழு மணி சங்கொலியாய்
பசிக்கு பேரொலி எழுப்பி
அழும் குழந்தையின் வாயில்
அழுகை நிறுத்த இனிப்பு சூப்பியை
எடுத்து திணித்தாள் அம்மா

வெளியே எடுத்து
அதை வீசிய குழந்தையை
வெறித்துப்பார்த்த அந்தப் பொழுதில்
வீட்டுக்குள்ளே இவை வீற்றிருக்க

வாசலின் வெளியே
யாதொன்றும் அறியாமல்
நிலைத்த பார்வையோடும்
கோணல் வாயோடும்
விறகு கட்டைகளுக்கு
விடை சொல்லிக்
கொண்டிருந்தவன்
பெயர் என்னவோ?

**நேசமுடன் ஈசு**

## நூல் விமர்சனம்




# நிலவுக்குள் சில ரணங்கள்'

**(நூல் ரசனைக் குறிப்புகள்)**

கலைத்துவத்தின் காலக் கண்ணாடியாக விளங்கும் இலக்கியங்களுக்கு எழுத்தே முன்னோடியாக இருக்கின்றது. இதை சமூகத்துக்கு எடுத்துச் செல்லும் சிறந்த படைப்பாளிகள் நல்ல அறிவு பூர்வமான படிப்பாளிகளையும் வாசிப்பு பிரியர்களையும் உருவாக்கி விடுகின்ற அரும் சாதனையாளர்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

முன்னரை விட முஸ்லிம் பெண்கள் இன்று சிறந்த இலக்கிய தாகம் மிக்கவர்களாக தோற்றமளித்து இருப்பது பெண்களின் அறிவு வளர்ச்சிக்கான முயற்சியாகவே புலப்படுவது தெளிவு .

அந்த வகையில் இன்று எமது முஸ்லிம் பெண் எழுத்தாளர்களின் சிறுகதை நூல்கள் வெளிவந்த வண்ணம் இருக்கின்றன.

இதற்கு காரணம் தற்கால கல்வி முறையும், இலத்திரனியல் ஊடகங்களும், அதிகமாக வெளிவரும் தரமான இலக்கிய சஞ்சிகைகளின் தாக்கங்களும் எனலாம்.

கடந்து செல்லும் பாதை வழியே மனித வாழ்க்கையானது, அதன் வர்ணங்களையும் நம்மில் தெளித்தவாறே தான் கடந்து செல்கின்றது.

சமாதானம் எல்லா மனிதாபிமான இதயங்களிலும் பிரார்த்தனையாகித்தான் கிடக்கின்றது. ஆனால் மனிதாபிமானத்தையும், மனிதத்துவத்தையும் வென்றெடுப்பதுதான் இன்று நம்முள் உள்ள பெரும் பணி.

இவற்றைத் தான் இன்று எழுத்தாளர்கள் தங்கள் 'பேனா முனை மூலம் சாதனையாக நிகழ்த்திக் கொண்டிருக்கின்றனர்.

மந்தைகள் கூட்டமோ தனது மேய்ப்பாளர்கள் பற்றி சிறிதும்

கவலைப்படுவதே இல்லை' அதுபோல வாசகர்களும் படைப்பாளியை விட சிறந்த படைப்புகளையே நேசித்து வாசிக்கின்றனர்.

அந்த வகையில் ஒரு சிறந்த படைப்பாளியான முஸ்லிம் பெண் எழுத்தாளர் வஸீலா ஸாஹிர் அவர்களையும் குறிப்பிடலாம். அவர்களின் 'நிலவுக்குள் சில ரணங் கள்' என்னும் அருமையான சிறுக தைத் தொகுப்பு ஒன்று எனக்கு அண்மையில் வாசிக்க கிடைத்தது.

இவர் பாடசாலை காலங்களி லேயே இலக்கியங்களில் ஆர்வம் மிக்கவராக விளங்கியதுடன், பல கவிதைப் போட்டிகளில் பங்கு பற்றி பரிசில்களும் பெற்று இருக்கிறார்.

தொடர்ந்து சிந்தாமணி, தின கரன், நவமணி போன்ற பிரபல பத்திரிகைகளில் சிறுகதைகளும் எழுதி வந்துள்ளார்.

வானொலியில் மாதர் மஜ்லிஸ், இளைஞர் இதயம் போன்ற நிகழ்ச் சிகளிலும் இவரது ஆக்கங்கள் வெளிவந்திருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

ஒரு எழுத்தாளனின் முதல் நூல் வெளியீடு என்பது முதல் பிரசவம் போன்றது .ஒரு கன்னி முயற்சி-யாகவே இந்நூல் வெளிவந்திருக் கின்றது.

அழகிய அட்டைப் படத்துடன் 66 பக்கங்களில் பிரமாதமான பத்து சிறுகதைகள் இல் நூலுக்குள் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன.

இந்நூலின் முதல் கதையே மிகவும் அருமையான கருப் பொருளைக் கொண்டதாக காணப்படுகிறது.

இன்று நம் இளைய சமுதாயத் தின் அவல நிலையை அழகுற சுட் டிக்காட்டி, அதனால் விளையும் யதார்த்தத்தையும் உணர்த்தும் கதையாக 'கானல் நீர்' கதை காணப் படுகின்றது.

பாடசாலை காலங்களில் ஏற்படும் 'பாலினக் கவர்ச்சியை காதல் என்று நம்பி வீட்டை விட்டு ஓடிப் போய் சீரழியும் டீன் ஏஜ் இளசுகளின் கதை.

கூடப் படிக்கும் சக மாணவி மேல் காதல் கொண்டு வீட்டை விட்டு ஓடிப்போய், கடைசியில் ஓடிப்போன அந்த மாணவன் யோசித்து, அழகானதொரு முடிவு எடுத்து 'ஓடிப்போனவர்கள்' என்ற அவப் பெயரிலிருந்தும்

குடும்பத்தினையும் அவமான சீரழிவுகளில் இருந்தும் காப்பாற்றுவதான அம்மாண வனின் முடிவு சூப்பர். முதல் கதையே அருமையான கதையாக தந்திருக்கிறார் நம் நூலாசிரியர் வஸீலா ஸாஹிர்.

அடுத்து 'குடும்பம்' என்ற சிறு கதை கூறும் விடயம் என் மனதை மிக ஆழமாக ஊடுருவி நிற் கின்றது என்றால் அது மிகையாகாது.

இலக்கியத்தில் நாட்டம்

கொண்ட தனது தாயார் இளமைக் காலத்தில், வீட்டுச் சூழ்நிலை, தன் தகப்பனின் விரும்பாத தன்மை என்பவற்றால் ஆற்றல் இருந்தும் எழுத்துத்துறையை மறந்து, மறக்க டிக்கப்பட்டு சாதாரண குடும்பப் பெண்ணாக வாழ்ந்து கொண் டிருந்த தனது தாயாரின் நிலை அறிந்து.. தனது அன்பு மகள் அவரை சிறந்த எழுத்தாளராக்கி கலாபூண விருதும் பெற வைத்து... தாயாரின் உயர்வில் இன்பம் காணும் மகளாக இக்கதையின் நாயகி சித்தரிக்கப்பட்டிருப்பது சிறப்பு.

இன்று பல தாய்மார்களின் நிதர்சன உண்மையை வெளிக் கொணர்ந்த உணர்வு பூர்வமான கதையாக இக்கதை காணப்படு கிறது மிகவும் அருமை.

அடுத்து 'பாதி உறவு', 'என் ஒளி', 'விடியும் நாட்கள்' போன்ற கதை கள் மூலம் சமூகத்தில் நடக்கும் பெண்களுக்கான ஆதரவற்ற நிலை, அன்புக்காக ஏங்கும் நிலை, ஏமாற் றம் இன்னும் சமூக அவலங்களை எதிர்கொள்ளும் கதைகளாக தொடர்கின்றது இவரின் படைப் புகள்.

பெண்கள் சமுதாயத்தின் பல வீனமான உறுப்பு. இழிவான கேவ லமான ஒரு உறுப்பன்று.

ஒவ்வொரு பெண்ணும் ஏதோ ஒரு வகையில் தொழில் செய்து வாழக்கூடியவர்களாகவும்.. நன் றாக படிக்கும் வயதில் வாழ்க்கை பாதிக்கப்பட்டவர்கள் மீண்டும் கல்வியில் சிகரம் தொட்டு, யாரால் பாதிக்கப்பட்டார்களோ? அவர் களுக்கே மனமுவந்து இக்கட்டான நேரங்களில் உதவி செய்யும் தருணங்கள் ஏற்படும் என்பதை மிக அழகாக ஹதீஸ் நபி மொழிகள் என்பனவற்றை ஆதாரம் காட் டியும் கதைகளை தந்திருப்பது மிக வும் அருமையிலும் அருமை.


நவீன கால பெண்கள் படும் அவஸ்தை அவலங்கள்,அவர்களின் துருப்பிடித்த துயரவாழ்வை போக் குவதற்கான வழிகள், அவர்கள் எதிர்கால வாழ்வு சுபீட்சமாக அமைவதற்குமான வழிகாட்டுதல் கள் என்பவற்றை கதைகளில் தந்தி ருப்பது இலட்சியப் பாங்கானவை எனலாம் .

இவர் வாழ்வில் சந்தித்த அடர்த்தியான துயரங்களை தனது எழுத்துக்கள் மூலம் சிந்தனை தூறல்களாக தந்திருப்பதன் மூலம், இஸ்லாமியப் பெண் எழுத்தாளர் வஸீலா ஸாஹிர் அவர்களை இலக்கிய உலகம் நிச்சயம் திரும்பிப் பார்க்கும் என்பதில் சந்தேகம் இல்லை .

இவர் மேலும் பல நல்ல இலக்கியங்கள் படைத்து சிகரம் தொடர்கலை உலக சார்பில் நாமும் வாழ்த்துவோம்.

**ஏ.எஸ் சித்தி மிஸ்ரியா அமீன்**
**கிண்ணியா**

# வேறாகா வேர்கள்




இலக்கியம் என்பது தொன்று தொட்டு மக்களின் வாழ்வியலை எடுத்தியம்புவதற்கும், வரலாற்று நிகழ்வுகளை அறிந்து கொள்வதற்கும் ஏதுவாக அமைந்த ஒன்றாகும். அதுமட்டுமல்லாமல், பண்பாட்டு விழுமியங்களை வரும் தலைமுறைக்கு பழுதில்லாமல் கொண்டு சேர்க்கக் கூடிய காலக் கண்ணாடியுமாகும். அவ்வகையில் எழுத்தாளர் நஜ்முல் ஹுசைன் அவர்கள் எழுதியுள்ள 'வேறாகா வேர்கள்' தமிழ் இலக்கியத்துக்கு கிடைத்த ஒரு பொக்கிஷமாகும். இதில் இவர் எழுதிய 23 சிறு கதைகள் சமூகத்திற்கு அழகிய முன்மாதிரியாகத் திகழ்ந்து அஹிம்சையால் வென்றெடுக்கக் கூடிய ஐக்கியத்தையும், அன்பையும், நல்ல பண்புகளையும் போதிக்கின்றன. மனிதநேயம் இழையோடும் ஒவ்வொரு கதையும், சமுதாயத்துக்கு ஒரு நீதியை முன்னிருத்திச் செல்வது பாராட்டுக்குரியது. போர்க்களத்தில் ஆயுதங்களுக்குப் பதிலாக பூவெடுத்து எதிராளியின் மேல் வீசுவது போல, கதைகளில் ஒரு மென்மையான வருடலாக, எளிமையான தீர்வுகளை சொல்லி கதைகளைப் புனைந்திருக்கும் நேர்த்தி, வாசிப்போர் மனதில் ஒரு பிரமிப்பை ஏற்படுத்துவது நிச்சயம்.

ஒரு எழுத்தாளன் என்பவன் தனது எழுதுகோல் பிரசவிக்கும் எழுத்துக்கள் மூலம் சமூக சீர்கேடுகளை தடுத்து நிறுத்தி, நல்லதொரு சமுதாயத்தை உருவாக்க வேண்டும். அது அவனது தார்மீகக் கடமையுமாகும். அந்த பொறுப்புணர்ந்து, தன் கடமையை செவ்வனே செய்து முடித்திருக்கிறார் நூலாசிரியர் நஜ்முல் ஹுசைன்.

நம் சமுதாயத்தில் புரையோடிப் போன பல சீர்கேடுகள், இவர் எண்ணங்களை ஆக்கிரமித்து ஏற்ப

டுத்திய தாக்கத்தின் விளைவே இந்நூல் உருவாக்கத்துக்கு வித்திட்டிருக்க வேண்டும். நேர்மறையான எண்ணங்கள் இழை யோட கதைகளில் இவர் கையாண்ட யுக்தியானது, சாணக் கியர் வகுத்த போர் முறை நுட்பம் போன்று சாமம் எனும் இன்சொல் கூறி சமாதானமாக எதிராளியை வழிக்கு கொண்டு வருதல் போல மிக மென்மையாக மனித உணர்வு களைத் தூண்டு வதாக அமைந்தி ருக்கிறது.

இந்நூலில் உள்ள 'அவனில் லாமல் நானில்லை', 'அசோகன் பிறந்தான்' போன்ற கதைகள் சமூக ஒற்றுமையை வலியுறுத்தும் சிறந்த கதைகளாக அமைந் துள்ளன. 'கொடுத்து வைத்தவன்' கதையில் சாகும் தறுவாயில் இருந்த போதும்,, தன்னை மோதியவனை மன்னித்தது மட்டுமல்லாமல் சட் டத்தின் கைகளில் சிக்கி விடாமல் காப்பாற்றி, அனுதாபத்தால் அவன் இறுமாப்பைத் தகர்த்த விதமா கட்டும், 'ஏன் இப்பிடி செய்தீங்க' கதையில் தன் தாயைப் போலவே தன் வாழ்க்கைத் துணையின் தாயையும் பராமரிக்க வேண்டு மென தொட்டுக் காட்டிய விதமா கட்டும் மனதுக்கு நிறைவாக அமைந்திருந்தது.

'யாருக்குப் பாராட்டு' எனும் கதை, ஊழலின்றி ஊருக்கும் நாட்டுக்கும் நல்லது செய்யும் அரசி யல்வாதிகளும் இருக்கிறார்கள் என இனங்காட்டிப் போயி ருக்கிறது. 'யார் அநாதை' ஆங்கில கலாசாரம் வளரும் தலை முறைக்குள் திணிக்கப் பட்டிருப்பதை நகைச்சுவை இழை யோட சொல்லிப் போயிருக்கிறது. ஏனைய கதைகள் மனித நேயத்தை யும், இறையச்சத்தையும் வாசிப் பவர் மனங்களிலும் விதைத்துச் செல்கின்றன. குறிப்பாக வளர்ந்து வரும் இளைய சமுதாயத்துக்கு வாழ்வியல் நுட்பங்களைச் சொல்லி, புதுப்பாதையை செதுக்கி வழிகாட்டியிருக்கின்றன என்றே சொல்லலாம். இந்நூலானது சிங் கள, ஆங்கில மொழிகளிலும் மொழிபெயர்ப்பு செய்யப்பட வேண்டிய ஒரு நூலாகும். அது புரிந்துணர்வை வளர்த்து சமூக ஒற்றுமைக்கும் வழிகோலும் என்பது திண்ணமே!

'வேறாகா வேர்கள்' மனித நேயமும், ஒற்றுமையும் தழைத் தோங்கச் செய்யும் சமூகக் கட்ட மைப்பின் ஆணிவேரென, இலக் கிய மண்ணில் ஆழமாக வேரூன்றி, வரலாற்றில் தடம் பதிக்கும்.


இந்நூலை எழுதிய எழுத் தாளர் நஜ்முல் ஹுசைன் அவர் களை (வலம்புரி கவிதா வட்டத் தின் தலைவர்) நாமும் முத்தமிழ் கலசம் சார்பாக வாழ்த்துகிறோம்.

**வஃபீரா வஃபி**

# பலாப்பிஞ்சு சலட் (பொலொஸ் சம்பல்)

## தேவையானவை

அவித்து பொடியாக நறுக்கிய பலாப்பிஞ்சு ஒரு கப்
நறுக்கிய வெங்காயம் 1
நறுக்கிய ப.மிளகாய் 1
நறுக்கிய தக்காளி 1
கட்டித் தேங்காய்ப் பால் 1/4 கப்
நெருப்பில் வாட்டிய காய்ந்த மிளகாய் 2
மிளகு தூள் 1/4 தே.க
எலுமிச்சம் ஊறுகாய் அல்லது எலுமிச்சம் சாறு சுவைக்கேற்ப
உப்பு சவைக்கேற்ப
(விரும்பினால் மாசித் தூள் ஒரு மே.க சேர்க்கலாம்)




## செய்முறை

அனைத்தையும் லேசாகப் பிசைந்து கலக்கவும். வாசனையும் சுவையும் பிரமாதமாக இருக்கும் இந்த சலட் பசியுணர்வைத் தூண்டக்கூடிய ஒரு rice puller என்றும் சொல்லலாம்.

## சமையல் டிப்ஸ்

இடியப்பத் தட்டுக்கு பதிலாக இட்லித் தட்டு அல்லது வாழையிலை பயன் படுத்தி விரைவாக இடியப்பம் செய்யலாம். எண்ணெய் பூசாமலேயே ஒட்டாமல் கழன்று வரும். இலங்கையில் பிரம்பாலான சிறிய இடியப்பத் தட்டு ஒன்று 40-80 ரூபா என்ற விலையில் விற்பனையாவதுடன், இவை சீக்கிரமே உடைந்தும் விடுவதால் இந்த முறையில் செய்து பாருங்கள்! செலவை மிச்சப் படுத்தலாம்



# தேவதையைக் காணவில்லை
## (சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா)

வான்மதியே கொஞ்சம்நில்
வாஞ்சையொடென் கதையைக்கேள்
தேனமுதாய்ப் பேசுகின்ற
தேவதையைக் காணவில்லை

ஏன்னென்று கேட்டுவந்தென்
ஏக்கத்தை தணிப்பாயா
அவளென்றன் நினைவுகளில்
மோதுவதால் நெஞ்சமெல்லாம் புண்ணாகி

அனல்போலக் கொதிக்கிறது
அங்கமெல்லாம் துடிக்கிறது
காணாமல் உறக்கமின்றி
வாடுவதால் உடலதுவும் ஓய்ந்துவிடச்
சிறகொடிந்த பறவையாகத்
திரிகின்றேன் பாதையெங்கும்

பேரொளியே
ஆறுதலின்றித் தவிக்கின்றேன்
அலைமோதும் நெஞ்சமொடு
கூறுமதி தவறென்றால்
குற்றத்தை அகற்றிடுவேன்

ஆகையால் விரைவாய்ச்
சென்று விடையை அறிந்து
நெருடலைச் சற்று நீக்கு
சருகாய் உதிருமுன் தடுத்து விடுவாய்



**நிர்மலா சிவராசசிங்கம்**
சுவிஸ்

# கண்டுகொள்ளாதிரு!

குண்டு வெடிப்பு
நிகழ்த்தப்பட்ட இடத்தில்
சுவடுகளற்ற உலகின்
தலைச்சிறந்த
குரல்வள தேர்வு கூட்டம்
கூடி நிற்கிறதை
முன்பதிவு செய்வீர்களாக!

வளர்ச்சி என்ற பெயரில்
பூமியின் அடுக்குகளிலிருந்து
உறிஞ்சப்பட்ட பிராண வாயுவை
சிலிண்டரில் அடைத்து
ஏற்றுமதி செய்துக்கொண்டிருப்பதை
சப்தமே இல்லாமல் பார்ப்பீர்களாக!

தலைப்புச்செய்தியே சிறுமி
பலாத்க்காரம். அதை மறந்து
நாளை 20-20 கிரிக்கெட் பார்த்து
ரசித்துக்கொண்டிருப்பீர்களாக!

அமெரிக்க மாப்பிள்ளை
அங்கேயே வாழ்கிறார்
ஸ்கைப்பில் தான் திருமணம்
செய்துக்கொண்டோமென்று
பெண்தோழியோடு
இருந்த வண்ணம் புகைப்படம்
வலைத்தளத்தில் பதிவீர்களாக!

நீங்கள் அந்தக் கட்சி
நாங்கள் இந்தக் கட்சி
ஆயினும் ஊழல் கட்சிக்கே
குடும்பமே ஓட்டுப்போட்டோம் என
சில்லறை கிடைத்தையெண்ணி
குதூகலிப்பீர்களாக!

ஹலால் என்ற பெயர் பலகை
தொங்கவிட்ட அவர்களை
மறந்தும் கேட்டிடாமல் கறி
வாங்கி செல்வீர்களாக!

போராட்டமே அரசாங்கத்திற்கு
எதிராய் - போராட இடம்
ஒதுக்கி கொடுத்ததற்கு
உயர்மட்ட அதிகாரியை
புகழ்வீர்களாக!

மனசை கல்லாக்கிக்கொண்டு
பிராணிகளை அறுப்பதுப்போல்
மனிதன் கையால்
மனிதனே அறுத்துக்
கொண்டிருப்பது
சமூகமாகவும் சூழ்ச்சியாகவும்
நடக்கிறதை மறந்தும் கூட
நினைக்காமல் இருப்பீர்களாக!

**– த.இர்ஃபான்**





# காசாவின் கண்ணீர் அவலம்

புனித பூமியாய் உலகினிலே
மனித வாழ்வு கொடுத்திட்டாய்
இரத்தங்கள் ஆறாய்ப் பெருக
இரங்கல்களாய் கண்ணீர் சொரிய

செங்கறைகள் ஊற மனதோரம்
கவலைகள் சேர
மாண்புமிகு இறையோனிடம்
பிரார்த்தனைகள் கோர
விடுதலைக்காய்
உலகமெல்லாம் வாட

சின்னஞ்சிறு பிஞ்சுகளை நஞ்சாய்
நசுக்க குண்டலைகளின் கரைகளில்
உள்ளம் தொலைக்க
அகமும் புறமும் இறைவனை
அழைக்க இறுதி வார்த்தையாய்
இறைநாமத்தையே ஒலிக்கிறார்கள்

மஸ்ஹறின் பீடம் அதில்
கணீர் ஒலிகள் வீழ
பலஸ்தீன பூமி அது
இறுதி அரங்குக்காய் தயாராகிக்
கொண்டிருக்கிறதோ

எத்தனை வருடங்கள்
எத்தனை உயிர்கள்
எத்தனை நாடுகள்
எத்தனை வெடிகுண்டுகள்

அத்தனையும் அல்லாஹ்
தாங்க வைக்கிறான்
தளராமல் அவர்களை
போராடவும் வைக்கிறான்
ஒரு பிடி சோற்றுக்காய்
உலகம் அறியும் படி கதற
இங்கே நாம் உலக
இன்பங்களை தேடி அலைந்து
கொண்டிருக்கிறோம்

ஹிஜாபோடு போராடி
ஹிஜாபோடு வபாத்தாகி
கல்புகளில் கண்ணீரை இட்டு
கடைசி நிமிடம் வரைக்கும்
ஷஹீதுக்காய் ஏங்கும் பல
உள்ளங்களை என்ன சொல்வது
இங்கு எவ்வித கவலையும் இன்றி
பிரார்த்தனைகளிலும் கூட
பிரிவு படுத்தும் சில உள்ளங்களை
என்ன சொல்வது

இறுதிப் போரில்
உறுதியாககும் உலக முடிவும்
அறுதியான ஈமானும்கூறும்
எது மார்க்கம் என்று
எது பற்று என்று

கண்ணீரோடு இறைவனை
அழைத்து எம் பிரார்த்தனைகளில்
அவர்களையும் இணைத்து
விடுதலைக்காய் வேண்டிடுவோம்
வீரியமாய் மார்க்கத்தை
பேணிடுவோம்

**றினத் றாசிக்,**
நிந்தவூர்

# நினைவெல்லாம் சுஜா...

றஹீமா இன்சார்
மீராவோடை

சதீஷ் கேசங்களை கலைத்து கலைத்து சீர் செய்து கொண்டான். ட்ரவுசர் சேட்டையும் நீட் பண்ணினான்.



பொறியியல் பீடத்தில் கால் பதிக்கும் முதல் நாள். அவனுள் பதற்றமும்) பரவசமும் ஒருங்கே இணைய புதிய தோர்மகிழ்ச்சியுடன் வளாகத்தில் நுழைந்தான்.

'ஹாய்... ஹாய். குட் மோனிங்' குரல்கள் எங்கும் ஒலித்தன. அறிமுகப் படலம் இடம் பெறும் வேளைமெல்லிடைவளைய ஒருமங்கை வந்து கொண்டு இருந்தாள். எல்லோர் பார்வையும் அவள் பக்கம் திரும் பியது. 'ஹாய் பிரண்ட்ஸ் எப்படி?' இதழில் புன்னகை சிதற நின்றாள். சதீஷ் 'ஹாய் good morning! "I am சதீஷ். Your sweet name" பேசத் தொடங்கினான். "Very good morning! i am சுஜா' என அறிமுகம் செய்து கொண்டாள்.

நாட்கள் நகர நட்புக்கள் பல காதலாய் மறுமலர்ச்சி கண்டன. சதீஷ் சுஜா நட்பும் காதலாய் தளிர் விட்டாலும், இதய வறைக்குள் இறுகி கிடந்தன.

யார் முதலில் சொல்வது என்ற போராட்டம் நடத்தினர்.

காலை புலர்ந்தது விரிவுரைக்கு எல்லோரும் தயாராகினர். சதீஷ் சுஜாவுக்காக காத்து நின்றான். 'ஹாய் சதீஷ் என்ன

செய்றீங்க class க்கு time ஆகிட்டு' - என அங்கு வந்த சுஜா அவன் பதிலுக்கு கூட காத்திருக்காமல் அவன் கரங்களைப் பற்றிக் கொண்டு நடக்கத் தொடங்கி னாள். ஆயிரம் பட்டாம்பூச்சிகள் அவனுக்குள் சிறகடித்துப் பறந்தன.

சுஜாவின் வார்த்தைகள் தொடர்ந்தன. அவள் சிரிக்கும் போது கன்னங்களில் குழிகள் விழுந்தன. காற்றில் அலைந்து நெற்றியில் புரண்ட முடிகளை ரசித்த சதீஷின் இதயம் பாடத் தொடங்கியது.

அன்றும் வழமை போன்று சதீஷும் சுஜாவும் கல்லூரிவளாகத்தில் இருந்து மயங்கும் மாலையின் அழகை ரசித்தபடி நடந்து கொண்டி ருந்தார்கள். சதீஷ் நம்ம ஸ்டடி இந்த இயரோடு முடிகிறது. உங்க வீட்டிற்கு நம்ம றிலேசன்ஷிப்ப சொல்லிட்டிங்களா? (உள்ளூர கவலை கலந்த தொனியில் பேச்சை தொடங்கினாள் சுஜா) ''சுஜா கொஞ்சம் வெயிட் பண்ணுங்க டைம் பார்த்து வீட்ட சொல்றன். சரி நீங்க சொல் லிட்டீங்களா?' என அவனும் கேள்விக் கணை தொடுத்தான். 'இல்ல சதீஷ் .நீங்க நல்ல முடிவை சொன்னாதான் நான் பேசலாம் டடி, மம்மி என் பேச்சை கேட்பார்கள். என தன்னம்பிக்கையை அவனிடம் ஒப்பு வித்தபடி பிரதான பாதையில் கால் வைத்த அந்த நொடி வேக மாக வந்த பேருந்து சாரை மாரை யாய் அடித்து தூக்கி வீசியது. இரத்த வெள்ளத்தில் நனைந்து போன சுஜா 'சதீஷ்...சதீஷ்... என்னாச்சி... எங்க... இருக்கீங்க...' என சுதியிழந்து அவள் குரல் ஒலித்தது. அருகே ஓடிச் சென்று அள்ளி எடுத்து அணைத்து 'சுஜா... சுஜா... என்னம்மா உனக்கு ஒன்றும் இல்ல. நான் உங்கூட இருக்கன்.' அவன் கதறி அழுது துடித்தான். மக்கள் கூடி இரத்த வெள்ளத்தில் மிதந்த சுஜாவை காப்பாற்ற முயன்றார்கள்.

அவன் அணைப்பிற்குள் இருந்த சுஜாவின் கண்கள், கண்ணீர் சொரிய அவனைப் பற்றிய கரங்கள் நழுவியது. சுஜா வின் உயிர் அவனிடம் இருந்து விடை பெற்றது. 'நோ... நோ... சுஜா.. சுஜா.. என்ன தவிக்க விட்டு போ-யிட்டியே..' அவளை இறுகப் பற்றி அழுதான். அவன் அழுகை ஓயவே இல்லை.

பேராதனை வைத்திய சாலை யில் சஜாவின் உடற்கூற்று பரிசோதனை நடைபெற்றுக் கொண்டிருந்தது. செய்தி அறிந்த பெற்றோர்கள் பதறிப்போய் ஓடி வந்தனர். 'என்ன நடந்தது என்ட பிள்ளைக்கு காலையில நல்லாகத்தான வந்தவ... சுஜா என்னடா இது நான் போயிருக்க கூடாதா?' தாய் கதறி அழுதார். தாயின் கதறல் வைத்திய சாலையை பதறடித்தது. சுஜாவை பெற்றோர் எடுத்து செல்ல தயாரானார்கள். அதிர்ந்து போனான் சதீஷ் 'ஓ மை கோட் நான் என்ன செய்வேன். என் நிலைமையை இவர்கள்

அறியமாட்டார்கள்.' மனதோடு போராட்டம் நடத்தினான். அவன் சொந்தம் அவனை விட்டு போன பிறகு அவனுக்கு இனி யார் இவர்கள்.

ஊரார் போன்று வலி தாங்கி சுஜாவின் கிரியைகளில் கலந்து கொண்டவன் கால்கள் திசை தெரியாது நகர்ந்தன.

வளாகத்தில் அவன் சென்ற போதும் அவனால் எதிலும் நிலைத்து நிற்க முடியவில்லை. 'சதீஷ் நீ இப்படி இருந்து என்னடா செய்ய போறாய்? சுஜாவ மறக்க முடியாது தான் அதற்காக உன்ட லைஃபை பாழாக்கிறாய்' நண்பர் கள் அவனுக்கு ஆறுதல் கூறினார் கள். ஆனால் அவன் அவளை தேடியே நடக்கத் தொடங்கினான்.

சுஜாவின் மரணம் சதீஷ் வாழ்வைப் புரட்டிப் போட்டு விட்டது. பல்கலைக்கழக கல்வியை மறந்தான். ஊண், உறக்கம், உறவு என அனைத்தும் அவனுக்கு மறந்து போனது. அவள் கல்லறையே கதி யானான்.

காலம் மட்டும் யாருக்காகவும் காத்திருக்கவில்லை. அது உருண் டோடியது. சதீஷ் சுஜாவின் நினை வில் சிக்குண்டு தன்னை இழந்து கொண்டு இருந்தான்.

'சுஜா.. சுஜா... எழுந்திருங்க நாம் போவம். நீங்க எப்பவும் ஏன் தூங்கிட்டே இருக்கீங்க.. என்னப் பாருங்க.'

'எழும்புங்க.. என்ன தனிய விட்டுட்டு நீங்க ஏன் தூங்கிறீங்க... எனக்கு தூக்கம் வருதில்லையே! எனக்கு பசிக்கலியே! வர மாட்டீங்களா?'

தன்னிலை மறந்து குழந்தை போல் அழுதான். சதீஷை பார்த்து குடும்பத்தினர், நண்பர்கள் என அனைவரும் அழுதனர். அவனை மீட்க வழி தேடித் தவித்தனர்.

'சதீஷ் எழும்பு கண்ணா. சுஜா... இங்க இல்லப்பா. அவ நம்மள விட்டுட்டு போயிட்டா போவம் வாப்பா'. கண் கலங்கிய அவனது அம்மாவின் குரல் கேட்டு - 'ஆமா நீங்க யாரு என்ட சுஜாவ தெரியுமா' எனக் கேட்டான்.

'ஐயோ... கடவுளே உன்ன இப்படி பார்க்கவா. இத்தனை கஷ்டப்பட்டு பெத்து வளர்த்தன். என்ட பிள்ளைய இன்ஜினியராப் பாக்க ஆசப்பட்டேனே!.' மகனை அள்ளி அணைத்து அழுதாள்.

பொறியியலாளராக பார்க்க ஆசைப்பட்ட பிள்ளை பொறி கலங்கி நிற்கின்றானே என்ற அன்னை யின் கண்ணீர் நிறைந்த ஏக்கம் அனைவரையும் அழ வைத்தது.

'நா வர மாட்டன் என்ட சுஜா இங்க இருக்கா' என அடம் பிடித்தான்.

'அவ இங்க இல்ல தங்கம் அவய போய்ப் பார்க்க தான் கூப்பிறன்'- என மகனை அழைத்தார் சதீஷ் தாய். 'ஹய் சுஜாவ பார்க்க

போறேன்’

மகிழ்ச்சியுடன் தாயை பற்றிக் கொண்டான். சதீஷை மனநல வைத்தியசாலையில் சேர்த்தார்கள்.

சதீஷ் மெல்ல கண்களை திறந்தான்.’ சுஜா... நீ... நீங்க.... வந்தீட்டீங்களா... என்ன விட்டுட்டு எங்க போனீங்க.’ ஆனந்தமும் ஆர்வமுமாய் எழ முயன்றவனை ‘பிளீஸ் எழும்பா தீங்க.. உங்களால இப்ப எழும்ப முடியாது. நீங்க தூங்கனும் ரெஸ்ட் வேணும் நான் பக்கத் தில இருக்கன் நீங்க நிம்மதியா தூங்குங்க சதீஷ்’- என அவள் சதீஷை அமைதிப்படுத்தி தூங்க வைத்தாள்.

‘சரி நீங்க வந்திட்டிங்க தானே நான் தூங்குறன் இனி எனக்கு என்ன குறை... நா தூ...ங்கி...’ அவன் குரல் மெல்ல மெல்ல அடங் கியது.

மருந்தின் மயக்கமும் மனதின் சந்தோசமும் அவனுக்கு தூக்கத்தை கொடுக்க அவள் கரங்களைப் பற்றிக் கொண்டான். அவள் விரல் சதீஷின் தலையை மெதுவாக வருடியது. ஒரு குழந்தை போல் அவள் மடியில் தலை வைத்து தூங்கினான்.

‘ஐயோ தலை வலிக்கிறது... நான் எங்க இருக்கிறன்’ -கண் விழித்த சதீஷ் முனகலுடன் எழ முயன்று, முடியாமல் சாய கரம் ஒன்று பற்றி யது அவனை. ‘சுஜா... சுஜா.. நீ... நீங்க’ அதிர்ந்து போய் எழுந்தான். கண்ணிமைக்கும் நேரத்தில் அவன் நண்பர்களும் அங்கு வந்து சேர்ந்தார்கள்.

‘சுஜா நீங்க.... உங்களுக்கு ஒன்னும் இல்ல தானே’ சந்தேகம், சந்தோசம நிறைந்த விழிகளுடன் புருவத்தை உயர்த்தினான்.

சுற்றி நின்ற நண்பர்களைப் பார்த்து ‘டேய் மச்சான் சுஜாக்கு ஒன்னும் ஆகல இங்கப் பாருங்கடா அவ உசிரோடு வந்திட்டாடா’ இன்பம் கலந்த தொனியில் பேசினான். அவன் செயல், பேச்சு எல்லாம் இவர்களை வியப்படைய செய்தது. யாரையும் காணாத அதிர்ச்சியும், அச்சமும் ஒன்று சேர உறைந்து போய் நின்றனர்.

‘சதீஷ் நீ இப்பதான் சுகமா யிருக்க ரெஸ்ட் வேண்டும் பிளீஸ் கூல்!’ என்றான் நண்பன் ஒருவன். ‘என்னடா சொல்றாய் நான் நல்லா இருக்கேன்.. உங்களை பார்த்தால் தான் என்னவோ போல நிற்கிறீங்க’ என்றான் சதீஷ். ‘என்னடா நடக்குது’ இன்னொருவன் திகைத்து பேச ‘அது தான் ஒன்னும் புரியல’ என மற்றொருவன் சொல்ல அவர்களுக்குள் கிசுகிசுத்தனர். இது எதனையும் பொருட்படுத்தாத சதீஷ் ‘சுஜா... நீ எங்க போனாய் நம்ம பிரண்ட்ஸோட பேசேன்’ என சதீஷ் அவளை அழைத் தான். சுஜா எப்படி இங்கு இருப்பாள். ஆனாலும் அவனை திருப்திப்படுத்த முயற்சி செய்து அவளை தேடினார்கள். எங்கும்

இல்லை. அந்த நேரம் சுஜா சதீஷ் பார்வையில் இருந்து மெல்ல மறைந்து கொண்டு இருப்பதை கண்டு 'நோ... நோ... சுஜா டேய் என்னடா இது சுஜா மறைந்து போறாடா.. சுஜா...' வைத்திய



சாலை அதிர்ந்தது அவன் குரலில். அவன் குரலிடையே இன்னொரு அழுகுரல் மெல்லியதாய் ஒலிக்க அறை நிசப்தமாக மாறியது. 'சதீஷ் நான் சுஜா பேசுறன் உங்க வலியும், வேதனையும் என்ன சாந்தி அடைய விடுதில்ல நான் உங்க கூட வாழ ஆசப்பட்டன் அது நடக்கல நீங்க நிம்மதியா வாழனும் அப்பதான் என் ஆத்மா சாந்தி அடையும்.. ம்ம்... உங்க பின்னாடி நான் அலைகிறன்.'- அவளின் குரல் காற்றில் கீறலாய் கேட்டது. சதீஷிற்கு தற்போது தான், தான் வாழும் நிலை புரியத் தொடங்கியது.

அனைத்து ஆறுதல் சொன்ன நண்பர்களுடன் இணைந்து கொண்டான். 'சுஜா நீங்க நிம்மதி அடைய வேண்டும் அதற்கு நான் என்ன வேண்டாலும் செய்றன். சுஜா என்ன மன்னிச்சிடுங்க. பிளீஸ்' மண்டியிட்டு அழுதான். துவண்டான். தளர்ந்து போய் மீண்டும் நிமிர்ந்து எழுந்தான். அவள் ஆத்மா அவனிடம் இருந்து முழுவதுமாக விடை பெற்றது. அவளின் நினைவுகளை சுமந்து கொண்டு மீண்டும் பல்கலைக் கழகம் நோக்கி அவன் கால்கள் நடந்தன. சுஜாவின் புன்னகை பூத்த முகம் மட்டும் அவனுக்கு தெரிய அவள் நினைவோடு வாழத் தொடங்கினான்.

(முற்றும்)

பன்முகத் திறமைகள் கொண்ட ஆளுமையாக

# ஷாமென் நிஸாம்டீன்

இலங்கையில் எழில் கொஞ்சும் மலையகத்தின் கண்டி மாநகரை அண்மித்த கட்டுகஸ்தோட்டையை பிறப்பிடமாக கொண்ட இவர் உமர் மரிக்கார் மஹ்ரூப் மற்றும் சித்தி பவுசியா தம்பதிகளின் இரண்டாவது புதல்வியாவார்.



புனித அந்தோனியார் மகளிர் கல்லூரியில் ஆரம்பம் முதல் சாதாரண தரம் வரை கல்வி கற்று உயர் தரத்தை மடவளை மதீனா மத்திய கல்லூரியில் தொடர்ந்தார். அதனைத் தொடர்ந்து, பேராதனை பல்கலைக் கழகத்தில் வெளிவாரி மாணவியாக பதிவு செய்து கல்வி கற்றுக் கொண்டிருந்த வேளையில், திருமண நிச்சயதார்த்தத்தால் இடையில் கல்வியை நிறுத்த வேண்டி ஏற்பட்டது. பாடசாலை காலத்தில் சிறுவயதிலிருந்தே தமிழ் தின போட்டிகளில் பாடசாலை மற்றும் கண்டி மாகாண ரீதியி லும் பேச்சு, கவிதை, கட்டுரை, பொது அறிவு போட்டிகளில் கலந்து பரிசுகளை வென்றுள்ளார். பாடசாலை தமிழ் இலக்கிய மன்றத் தலைவி யாகவும் இஸ்லாமிய மஜ்லிஸ் செயலாளராகவும், அறிவுக்களஞ்சிய அணித்தலைவியாக செயல் பட்டுள்ளார். ஆங்கில தின போட்டிகளில் மற்றும் இல்ல விளையாட்டு போட்டிகளிலும் கலந்து பரிசில்களை பெற்றுள்ளார். தமிழ் பிரிவில் இல்ல விளையாட்டுப் போட்டித் தலைவியாகவும் பதவி வகித்துள்ளார். அக்குரணையைச் சேர்ந்த திரு. நிஸாம் டீன் என்பவரை திருமணம் செய்துள்ள இவருக்கு ஒரு மகனும் மகளும் இருக்கிறார்கள். வெளிநாட்டில் ஆங்கில ஆசிரியராக இருந்து இலங்கை வந்த பிறகு, ஆங்கில ஆசிரிய டிப்ளோமாவை முடித்து, இக்ரா இங்லீஸ் ஸ்கூல் எனும் தனியார் கல்விக்கூடம் ஒன்றை நிறுவி நடத்தி வருகிறார். பள்ளிக்காலத்திலும், ஆசிரியப் பயிற்சிக்

காலத்திலும் நிறைய நாடகங்களில் நடித்த அனுபவமும் இவருக்கு உண்டு. இவர் அங்கம் வகிக்கும் பீ.சுசீலாவின் இந்தியக் குழுமம் ஒன்றில் ஒரு போட்டிக்காக நடத்தப்பட்ட நாடகத்தில் பங்கேற்று, சிறந்த நடிகையாகவும் தெரிவு செய்யப்பட்டது குறிப்பிடத் தக்கது.

## எழுத்தார்வம்

இவருக்கு சிறுவயதிலேயே எழுத்தின் மீதும் வாசிப்பின் மீதும் மிகுந்த பற்றுதல். அதற்கு காரணம் வீட்டில் எப்பொழுதுமே மும்மொழி பத்திரிகைகள், சஞ்சிகைகள், நாவல்கள் தாராளமாகவே புழக்கத்தில் இருந்ததுதான். பெற்றோர்கள், தாத்தா, பாட்டி, சித்தி, மாமா என அனைவருமே புத்தகங்கள் பத்திரிகைகள் நாள்தோறும் வாசிப்பவர்களாக இருந்த சூழலில் வளர்ந்தவர். பாடசாலையிலும் சிறந்த யாழ்ப்பாண ஆசிரியர்களின் வழிகாட்டுதலில் வளர்ந்தார். தமிழ் உச்சரிப்பிற்கு பெரிதும் காரண கர்த்தாவாக சரவணமுத்து, செல்லப்பா ஆசிரியர்களை நன்றியுடன் நினைவு கூருகிறார். அத்தோடு பாடசாலையிலும் வாசிகசாலையிலும் சிறந்த புத்தகங்களை வாசிப்பது தினந்தோறும் தினகரன் நாளிதழ்கள், வாராந்த பத்திரிகைகள் என வீட்டில் போட்டி போட்டுக் கொண்டு வாசிப்பதும், வகுப்பில் நடைபெறும் சம்பவங்களை சிறு கதைகளாக எழுதி வகுப்புத் தோழிகள் இடையே பகிர்ந்து கொள்வதுமாக இருந்தவர், அன்றைய காலகட்டங்களில் றோணியோவில் வரும் விடயங்களை கொப்பியில் எழுதி அதனையும் வகுப்புத் தோழிகளிடம் பகிர்ந்து கொள்ள, அவர்களின் வாழ்த்தும் உற்சாகமூட்டும் வார்த்தைகளுமே இன்னும் இன்னும் எழுத தூண்டியது எனச் சொல்கிறார் பாடசாலை காலத்திலேயே தினகரன், சிந்தாமணி பத்திரிகைகளுக்கு எழுதியுள்ளார். சிறந்த நாவல் ஆசிரியர்களின் கதைகளை வாசிக்கும் பொழுது இவருள் எழுத வேண்டும் என்று வேட்கை அதிகரித்திருக்கிறது.. லட்சுமி, சிவசங்கரி, வாசந்தி, அனுராதா ரமணன், சுஜாதா, மு.வரதராசா, தீ. ஜானகிராமன் ஆகியோரின் புத்தகங்களை வாசித்தது மாத்திரமல்ல ஒவ்வொரு மாதமும் புத்தகக்கடையில் அவற்றை வாங்கி வாசித்து வீட்டு வாசிகசாலையை வளர்த்துள்ளதாக குறிப்பிடுகிறார் .




அதுபோலவே முதலாம் தரம் படிக்கும் பொழுதே தமிழ்

உச்சரிப்புடன் சிறந்த வாசிப்பு பழக்கம் இருந்தது. தரம் எட்டில் படிக்கும் பொழுதே யௌவன ராணி, கடல் புறா போன்ற நாவல்களை மூன்றே நாட்களில் வாசித்து முடித்தது பற்றி ஆசிரியர்கள் ஆச்சரியத்துடன் பேசிக் கொண்டார்களாம். சாண்டில்யனின் நாவல்கள், இவரின் தமிழை இன்னும் வளர்த்துக் கொள்ள ஏதுவாகியது. அதுவே இவரின் கட்டுரை, எழுத்தாற்றலுக்கும் மிக உதவியாக இருந்தது.

## சமூகப் பணிகளில் ஆர்வம்

இரண்டாவதாக பிறந்ததாலோ என்னவோ பொதுவாக கூறுவார்கள் அவர்களிடம் கொஞ்சம் சுறுசுறுப்பு அதிகமாக இருக்குமென. அந்த சுறுசுறுப்பே வீட்டில் பல வேலைகளை அவசரமாக இழுத்து முடிப்பது, பாட்டி வீடு பக்கத்தில் இருப்பதனால் சிறுவயதில் அவர்களுக்கும் ஏதாவது உதவி செய்வது என உதவி செய்யும் மனப்பாங்கு அதிகமா கவே இருந்தது. பாடசாலைகளிலும் பொறுப்புகள் தந்ததினால் அது இவரின் வாழ்வின் ஒரு அங்கமாகவே மாறிவிட்டது. திருமணத்தின் பின்பு வெளிநாட்டில் கணவருடன் வசித்த போது அங்கு பலரும் பல விதங்களிலும் உதவி செய்து கொள்வார்கள். இவரது கணவர் யார் வந்து உதவி கேட்டாலும் இல்லை என்று கூறாது அவரால் முடியா விட்டாலும் மற்றவர்களின் மூலமாவது அவர்களுடைய தேவைகளை நிறைவேற்றுவதை அவதானித்து தானும் அதில் உள்வாங்கப்பட்டுள்ளார். சிறுக சிறுக இவரால் முடிந்த வகையில் உதவி செய்து கொண்டிருக்கும் பொழுது, வசந்தம் தொலைக்காட்சியின் நிகழ்ச்சி ஒன்றின் வாயிலாக அப்போது இருந்த நிர்வாகி இர்பான் அவர்கள் மூலம் கணவனை இழந்த பெண்ணுக்கு மாதாமாதம் ஒரு கொடுப்பனவை தன்னால் முடிந்த அளவு செய்து கொண்டிருந்தார். (இதுவரை அவர்களே போட்டோவில் கூட இவரைக் கண்டதில்லை, ஆனால் இன்றும் தொடர்புண்டு). அதுவே நாளடைவில் இளம் விதவைகள் ஏன் திருமணம் செய்யக்கூடாது. அவர்களுக்கு எம்மாலான பங்களிப்பை செய்யலாமே என்று ஆரம்பித்தது தான் இளம் விதவைகளுக்கு திருமணத் தரகர்களாக இருந்தது. ஆனால் இதுவரை ஒரு ரூபாய் கூட இவர் பெற்றதில்லை. இதனை ஆரம்பித்த பிறகு இலங்கையில் நாலாபுறத்தி லிருந்தும் பல தொலை பேசிகள் அழைப்புகள், தங்களுடைய பிள்ளைகளின் விடயங்களை கூறுவார்கள். இதற்கென இவ ரது நட்பு வட்டாரத்தில் ஒரு குழு ஒன்றிருந்தது. அவர்களின் உதவியுடன்தான் இதனை நிறை வேற்ற இவருக்கு இலகுவாகவும் இருந்தது





இளம் விதவைகளை தாண்டி தமது குழந்தைகளை திருமணம் முடித்த பின் தனித்து வாழும் ஆணும் பெண்ணும் கூட திருமண பந்தத்தில் இணைந்து இன்றும் இவர்களுக்காக பிரார்த்தித்தவர்களாக உள்ளார்கள். இது இவர்களுக்கு பெரியதோர் ஆத்ம திருப்தியை தந்தது.

அதன் பிறகு நிறைய whatsapp குழுமத்தில் இணைந்திருந்த பொழுது ஸஹ்ரான் பிரச்சினையால் இலங்கையில் கல்வி தடைபட்டிருந்தது யாவரும் அறிந்ததே. அப்பொழுது இவருடன் ஒரு சிலர் சேர்ந்து பீனிக்ஸ் என்ற அமைப்பை உருவாக்கி அதன் மூலம் இலங்கையில் எல்லா பாகத்திலும் உள்ள மாணவ மாணவிகளுக்கு இலவச பயிற்சி, கற்கை நெறி இரண்டு வாரங்களாக நிகர் நிலை வழியாக தயாரித்து வழங்கியதோடு சிறுவர் தினத்தைக் கூட அதிலேயே கொண்டாடி சான்றிதழ்களையும் வழங்கியுள்ளார். இது வெற்றிகரமான ஒரு ப்ரொஜெக்டாக அமைந்தது. அதன் பிறகு POND என்ற பெயரில் சமூக நல பணிகளுக்காக அமைப்பை ஏற்படுத்தி அதன் மூலம் பல விடயங்களையும் இன்றுவரை செய்து கொண்டுள்ளார். அதில் இவர் உப தலைவியாக இருக்கின்றார். வலது கரம் கொடுப்பதை இடது கரம் அறியக்கூடாது என்றவாறு இவர்களது பணி அமைந்துள்ளது. மிகவும் வறிய குடும்பங்களுக்கு நேரடியாகவே சென்று உதவிகளை செய்து வருகிறது இவ் அமைப்பு. இதனையும் தாண்டி இவர் தனிப்பட்ட முறையில் மற்றும் நன்கொடைகளை தெரிந்தவர்களிடமிருந்தும் பெற்று கொரோனா காலத்தில் இலவச உலர் உணவுப் பொருட்களை வழங்குவதை பாரிய உதவித்திட்டமாகவே செய்து முடித்தார்.

பின்பு நாவலப்பிட்டிய நகரத்தில் ஏற்பட்ட வெள்ள நிவாரணப் பணியில் POND அமைப்பு இரு முறை சென்று புத்தம் புதிய ஆடைகள், உலர் உணவுப் பொருட்களை வழங்கியது. இன்ஷா அல்லாஹ் எதிர்காலத்தில் பெரிய அளவில் இந்த சமூகப் பணியை கொண்டு செல்ல வேண்டும் என்பதே இவருடைய அவா.

## இவரின் தற்போதைய செயல்பாடுகள், அங்கம் வகிக்கும் அமைப்புகள்

பீனிக்ஸ், அதனைத் தொடர்ந்து POND என்ற அமைப்பில் உப தலைவியாகவும் Srilanka Pen Club என்ற பெண் இலக்கிய ஆளுமைகளின் அமைப்பில் இவ்வருடம் செயலாளராகவும் கடந்த வருடம் உப தலைவியாகவும், கட்டாரிலிருந்து வெளிவரும் ஸ்கை தமிழ் மற்றும் துணிந்தெழு என்ற சஞ்சிகையின் ஆசிரிய ஆலோசகராகவும், கண்டி மலையக கலா மன்றத்தின் உறுப்பினராகவும், நெஞ்சாத்தி , சுவனத்துப் பாதை, ஆனந்த யாழ் போன்ற அமைப்புகளின் ஆலோசகராகவும் இருக்கின்றார். Srilanka Pen club என்ற அமைப்பின் இரண்டு நிகழ்ச்சிகளின் தயாரிப்பாளராகவும் செயல்படுகிறார். அதில் மாதா மாதம் பெயல் என்னும் பல்சுவை சஞ்சிகை நிகழ்ச்சியில் சிறுகதை வாசிப்பில் குரல்களை மாற்றி வாசிப்பதில் பலரின் பாராட்டையும் பெற்றுள்ளார்.

அறிவிப்புத்துறையில் இவர் படிக்கும் காலத்தில் இருந்தே நாட்டமிருந்தது. இது மிகவும் விருப்பமான துறை என்பதால்,அன்றைய காலகட்டத்தில் வகுப்பில் ஆசிரியர் பாடத்தை வாசிக்குமாறு கூறினால், ஒரு செய்தி வாசிப்பாளரைப் போன்றே இவர் பாடத்தை வாசிப்பதுண்டு. அதற்கு தீனி இப்பொழுதுதான் கிடைத்துள்ளது. அத்தோடு பல வானொலி விளம்பரங்களுக்கும் குரல் கொடுத்துள்ளார். பிரதி ஞாயிறுதோறும் இரவு 8.30 க்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவை 'கவிதா நதி' நிகழ்ச்சியில் ஒலிக்கும் குரல்களில் இவரது குரலும் ஒன்று.

தனியார் வானொலி ஒன்று நிகழ்ச்சி தயாரித்து வழங்குமாறும் இவரைக் கேட்டுள்ளார்கள். வேலைப்பளுவின் காரணமாக தாமதமாகிக் கொண்டே வந்ததாக சொல்லுமிவர், மிக விரைவில் புதியதோர் பரிமாணத்தில், இவரது குரல் வானொலியில் ஒலிக்கவிருப்பதை மகிழ்வுடன் பகிர்ந்து கொள்கிறார்.

Srilanka Pen club இன் வெளியீடாக வரும் அவரியின் முதலாவது மற் றும் நான்காவது சஞ்சிகையின் ஆசிரியராகவும் செயல்பட்டுள்ளார். நான்காவது அவரி சஞ்சிகை பென் கிளப்பின் இரண்டாவது மாநாட்டில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் வெளியிட்டு வைத்ததை மறக்க முடியாத விடயமெனக் குறிப்பிடுகிறார்.

## கிடைத்த பரிசுகள், விருதுகள்

- ☐ பாடசாலையின் ஆரம்ப பிரிவில் இருந்து மேல் வகுப்பு வரை வருடம் தவறாமல் பேச்சுப்போட்டி, கட்டுரை போட்டி, பாடல்,ஆங்கில பா, ஓதல் போட்டிக்கு பரிசுகள் கிடைத்துள்ளன.
- ☐ கண்டி மாகாண ரீதியில் பேச்சு, கவிதை,பொது அறிவுக் குழு போட்டிகளில் பரிசுகள் பெற்றுள்ளார்.

- -Srilanka Pen club இன் சிறந்த செயல்பாட்டாளர், சிறந்த நிகழ்ச்சி தயாரிப்பாளர் என்பதற்கான பரிசுகள் கிடைத்துள்ளன.
- கனேடிய விழித்தெழு என்னும் அரச அங்கீகாரம் பெற்ற அமைப்பின் ஒவ்வொரு வருடமும் பெண்கள் தினத்திற்காக வழங்கும் விருதில் 2023 ஆம் ஆண்டு சமூக செயல்பாட்டிற்கும் இலக்கிய செயல்பாட்டிற்கும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்..
- 2023 இலிருந்து சர்வதேச மனித உரிமை அமைப்பின் உறுப்பினரா கவும் உள்ளார்.

இலக்கியம், சமூக சேவை தவிர்ந்து சமையல் மற்றும் Cross stitch, Brazilian என்னும் தையல்களில் நாட்டமுண்டு. அதையும் நேரம் கிடைக்கும் பொழுது செய்து கொண்டுள்ளார். கற்றது கையளவு கல்லாதது கடலளவு என்ற நோக்கில் இன்னும் இவரை செதுக்கிக் கொள்ள கற்றவளாகவே இருக்கின்றார். அதேநேரம் ஒரு பெண் நினைத்தால் எதிலும் சாதிக்க முடியும் என்பதில் அசையா நம்பிக்கை இவருக்குண்டு. ஒரு பேனா போதும் ஒருவருடைய சரித்திரத்தையே மாற்றி விடலாம் என்று சொல் கிறார்.

காலம் சென்ற இந்திய ஜனாதிபதி டாக்டர் அப்துல் கலாம் கூறியுள்ள வார்த்தை எப்பொழுதும் தன்னை ஊக்கப்படுத்துவதாக கூறுகிறார். அதாவது எமது பிறப்பு ஒரு சம்பவமாக இருந்தாலும் இறப்பு ஒரு சரித்திரமாக மாற வேண்டும் என்பது போலவே, பிறந்தோம், வளர்ந்தோம், வாழ்ந்தோம் என்றல்லாது எம்மால் மற்றவர்கள் ஏதோ ஒரு வகையில் பயனடைய வேண்டும். சமூகத்திற்கு ஏதாவது நாம் செய்ய வேண்டும் என்ற கொள்கை மனதில் வேரூன்றியிருப்பதாக சொல் லுமிவர், தனது கன்னி நூலை வெளியிடுவதற்கான முயற்சிகளையும் மே ற்கொண்டு வருவதாகக் குறிப்பிடுகிறார்.

இறுதியாக, ஐந்தாம் ஆண்டில் வெற்றிகரமாகத் தடம் பதிக்கும் முத்தமிழ் கலசம் பாரெங்கும் மணம் வீசிட வேண்டும் என வாழ்த்தி, இவ்வரிய சந்தர்ப்பத்தை வழங்கிய ஆசிரியருக்கு தனது நன்றியையும் தெரிவித்தார். பன்முக ஆளுமையான ஷாமென் நிஸாம்டீன் இன்னும் பல வெற்றிப் படிகளேறி இமயம் தொட முத்தமிழ் கலசம் சார்பாக நாமும் நல்வாழ்த்துகளைத் தெரிவிக்கிறோம்.











பிரான்ஸிலிருந்து தமிழ் முழங்கும்

# தமிழ்நெஞ்சம்

**படியுங்கள்**
**பகிருங்கள்**







**இணையத்தில் படிக்கலாம்**

**tamilnenjam.com**

**முற்றிலும் இலவசம்**

**நீங்களும் எழுதலாம்**

e-mail :

editor@tamilnenjam.com

9 772719 252001